Registered as a NewsPaper

விலை: ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் - 8

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | சித்திரை-13 | 25-04-2004 | ஞாயிற்றுக்கிழமை | ஓசை -67

படச்சுருள்கள் அனைத்தையும் கனினி தொழில் நுட்பத்தில் ஒருமணி நேரத்திற்குள் கழுவிப் பெற்றுக் கொள்ள

பொற்காலம் வண்ணக் கலையகம்

MILLENNIUM COLOUR LAB

Video, Audio & Studio

மேலும் வீடியோ புகைப்பட சேவைகள், கணினி முறை வீடியோ மிக்சிங், பாடல் பதிவுகள், படம் பிறேம்செய்தல்,

அனைத்திற்கும் பொற்காலம் வண்ணக்கலையகம், யாழ் சாலை, கிளிநொச்சி.

R.V பந்தல் சேவை, தர்மபுரம். (சி-9440)

# பாராளு. சபை முதல்வர் பதவியும் பறிபோகலாம்

# ஆளும் கட்சி தரப்பில் ஏற்பட்டுள்ள அச்சம்!

## ஹெலஉறுமயவிற்கு எதிராகச் செயற்படவேண்டாம் ஜே.வி.பி.க்கு சுதந்திரக் கட்சி அறிவுறுத்து

(கொழும்பு)

**சிறிலங்கா நாடாளுமன்றத்தில்சபை முதல்வர் பதவியும் பறிபோகலாம் என்ற அச்சம் ஆளும் தரப்பிற்குள் ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து ஜாதிக ஹெல உறுமய பௌத்த பிக்குகளைச் சமாதானப்படுத்தும் முயற்சியில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஈடுபட்டுள்ளது. இதையடுத்து ஹெல உறுமயவுக்கு எதிராகச் செயற்பட வேண்டாம் என ஜே.வி.பி.க்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சி அறிவுறுத்தியுள்ளது.**

நாடாளுமன்ற சபாநாயகர் பதவி எதிர்க்கட்சிக்கு சென்றுள்ள நிலையில் சபை முதல்வர் பதவியும் எதிர்க்கட்சிக்குச் செல்லக்கூடிய வாய்ப்பு ஒன்று குறித்து ஆளும் தரப்பில் அச்சம் தெரிவிக்கப் படுகின்றது.

சிறிலங்காவின் வரலாற்றில் இதுவரை எதிர்க்கட்சியின் உறுப்பினர் ஒருவர் சபை முதல்வராக பதவி யேற்றதில்லை. சபை முதல்வர் ஒருவரே நாடாளுமன்றத்தின் நடவடிக்கைகள் குறித்து திட்டங்களை வகுக்கும் பொறுப்பைக் கொண்டிருக்கின்றார். தற்போதைய நிலையில் ஆளும் சிறுபான்மை அரசாங்கத்தின் சார்பில் சபை முதல்வர் ஒருவர் தெரிவு செய்யப்படுவாராக இருந்தால்,அவரின் திட்டங்களை பெரும்பான்மை எதிர்க்கட்சி ஏற்றுக்

(8ஆம் பக்கம் பார்க்க)

## மகாவலித்துறை தொடர்பாக சு.க.-ஜே.வி.பி.இன்று பேச்சு

(கொழும்பு)

மகாவலித்துறை தொடர்பில் மக்கள் விடுதலை முன்னணிக்கும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையில் தீர்க்கமான பேச்சு வார்த்தை ஒன்று இன்றைய தினம் இடம் பெறவுள்ளது.

சனாதிபதி செயலகத்தில் இது இடம்பெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

ஏற்கனவே மகாவலி தொடர்பில் எழுந்துள்ள முறுகல் காரணமாக மக்கள் விடுதலை முன்னணி தமது ஏனைய 4 அமைச்சுப் பதவிகளையும் ஏற்றுக் கொள்ளவில்லை.

இதேவேளை இன்று நடைபெறவுள்ள பேச்சுவார்த்தையின் அடிப்படையில் மக்கள் விடுதலை முன்னணி தமது அமைச்சுப் பதவிகளை ஏற்றுக் கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

முதலில் மகாவலித்துறையை தமது பொறுப்பின் கீழ் தருமாறு கோரிய மக்கள்விடுதலை முன்னணி தற்சமயம் விட்டுக் கொடுப்புக்கு உடன்பட்டுள்ளது.

சனாதிபதியின் கீழ் மகாவலித்துறை இருக்குமானால் அதன் பிரதி அமைச்சை தாம் ஏற்றுக் கொள்ளத்தயார் என்பதே அந்த முன்னணியின் தற்போதைய

(8ஆம் பக்கம் பார்க்க)

## ஹெல உறுமய பா.உ.வின் விகாரை அருகே கறுப்புக்கொடிகள் தொங்கவிடப்பட்டன

(கொழும்பு)

ஜாதிக ஹெல உறுமய பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஓமஸ்தே சோபித தேரரின் எம்பிலிப்பிட்டிய ஹிங்குரா போதிராஜ விகாரைக்கு அருகில் கறுப்புக் கொடிகள் தொங்க விடப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பாக நேற்று அதிகாலை சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இளைஞரை 15ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் விடுதலைசெய்யுமாறு எம்பிலிப்பிட்டிய நீதவான் உத்தர விட்டுள்ளார்.

கறுப்புக்கொடிகளை தொங்க விடுவதற்காக வந்தவர்களிடம் இருந்து மோட்டார் சைக்கிள் ஒன்றையும் பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

ஓமஸ்தே சோபித தேரரின் போதிராஜ விகாரைக்கு அருகிலுள்ள இரத்தினபுரி-எம்பிலிப்பட்டிய வீதியின் இரு மருங்கிலும் நேற்று அதிகாலை ஒரு மணியளவில் கறுப்புக்கொடிகள் தொங்க விடப் பட்டுள்ளன. இந்தச் சந்தர்ப்பத்தில் சோபித தேரர் விகாரையில் இருக்க வில்லை.

மேற்படி சோபித தேரர் சபாநாயக்கர் தெரிவில் ஐ.தே.கட்சிக்கு சார்பாக வாக்களித்த ஹெலஉறுமயவின் இருபாராளுமன்ற உறுப்பினர்களின் ஒருவராவார்.

## இரு மாகாணசபைகள் கலைக்கப்பட நடவடிக்கை

(கொழும்பு)

மத்திய மாகாணசபை இன்று நள்ளிரவுடன் கலைக்கப்படுகின்றது. இதன் பதவிக்காலம் இன்று நள்ளிரவுடன் முடிவடைவதை அடுத்தே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அதேசமயம் ஊவாமாகாண சபையின் பதவிக்காலம் நாளை நள்ளிரவுடன் முடிவடைவதால் இந்த மாகாணசபையும் நாளை நள்ளிரவுடன் கலைக்கப்படுகின்றது.

## இரு உந்துருளிகள் மோதி கிளி.நகரில் இருவர் காயம்

நேற்றைய தினம் கிளிநொச்சி நகரப்பகுதியில் இரண்டு உந்துருளிகள் நேருக்குநேர் மோதியதில் இரண்டுபேர் காயமடைந்துள்ளனர்.

பிற்பகல் 5.00 மணியளவில் பரந்தனில் இருந்து கிளிநொச்சி நகர்ப்பகுதி நோக்கி வந்த உந்துருளியும் கிளிநொச்சி நகரில் இருந்து பரந்தன் நோக்கிச் சென்ற உந்துருளியும் எதிர் எதிரே மோதிக் கொண்டன. இச்சம்பவத்தின் போது கிளிநொச்சி நகரப்பகுதியில் இருந்து வந்துபொன்னம்பலம் வைத்தியசாலை நோக்கி திரும்பிய உந்துருளியும் பரந்தனில் இருந்து வேகமாக வந்த உந்து ருளியும் மோதிக்கொண்டன.

இதில் வேகமாக வந்த உந்துருளியில் இருந்த இருவரும் காயமுற்று கிளிநொச்சி பொன்னம்பலம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (கு.தீ)

## ஒரு வாக்குக் கூட அளிக்கப்படாத சாவடி

நேற்று நடைபெற்ற வடமேல் மாகாணசபைக்கான தேர்தலில் புத்தளம் தேர்தல் தொகுதியில் பூக்குளம் வாக்குச் சாவடியில் ஒருவாக்கும் அளிக்கப்படவில்லை. சிறிலங்காவில் நடைபெற்ற தேர்தல்களில் இதுவரை ஒருவாக்கும் அளிக்கப்படாத வாக்குச் சாவடிகள் இருந்ததாக அறியப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## கறுப்புக் கொடிகட்டிய சம்பவத்தில் ஜே. வி.பி .யினருக்குத் தொடர்பு

### - ஹெல உறுமய பா.உ.தெரிவிப்பு

(கொழும்பு)

கறுப்புக் கொடிகட்டியவர்கள் சுதந்திர கூட்டமைப்பு அரசுடன் நேரடியாக தொடர்புபட்டவர்களே என்று எனக்கு தகவல்கள் கிடைத்துள்ளன. விசேடமாக ஜே.வி.பியினரே இந்தச் சம்பவத்திற்கு பின்னால் உள்ளார்கள். இவ்வாறு ஹெல உறுமய பாராளுமன்ற உறுப்பினர் ஓமஸ்தே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

கடந்த 22ம் திகதி பாராளு மன்றத்தில் இடம் பெற்ற சம்பவத்திற்கு பின்னர் அன்றைய தினமே எம்பிலிப்பிட்டியவுக்கு வரவேண்டாம் என்று அச்சுறுத்தல் விடுக்கும் தொனியில் பல்வேறு தொலைபேசி அழைப்புக்கள் வந்தன. சனநாயக முறையில் நாம் எமது வாக்குகளை அளித்தோம்.

நாம் மேற்கொண்ட சனநாயக நடவடிக்கைகளுக்கு எதிராக சிலர் செயற்பட முன்வந்துள்ளனர். அதனால் தான் எமது உயிருக்கும் அச்சுறுத்தல்கள் விடுக்கப்படுகின்றன. இந்த நிகழ்வுகள் 1989ம்,

(8ஆம் பக்கம் பார்க்க)

## பரந்தன் -முல்லை பிரதானசாலை போக்குவரத்து இடைநிறுத்தம்

(அலுவலக செய்தியாளர்)

கண்டாவளை வெலிக்கண்டல் சந்தி மற்றும் இதர பாலங்கள் புனரமைப்பு நடவடிக்கைகள் காரணமாக நாளை முழுநாளும் பரந்தன் முல்லை பிரதானசாலைப் போக்குவரத்துக்கள் இடைநிறுத் தப்பட்டுள்ளதென தமிழீழ காவல்துறை வாகன போக்குவரத்துப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

எனவே மேற்படி வீதியூடாக வாகனப் போக்குவரத்து மேற்கொள்ள வேண்டியவர்கள் கிளி. கோவிந்தன்கடைச் சந்தி வட்டக்கச்சி புளியம்பொக்கணைச் சந்தியூடாக நாளை பயணங்களை மேற்கொண்டு பாலப்புனரமைப்புப் பணிக்கு ஒத்தாசை நல்கிடும் வண்ணம் வேண்டியுள்ளனர். (சோ)

### -வடமேல் மாகாணசபைத் தேர்தல்-

## தபால் மூல வாக்களிப்பின்படி சு.க.-ஜே.வி.பி. கூட்டணி முன்னணியில்

(கொழும்பு)

நேற்று நடைபெற்ற வடமேல் மாகாண சபைக்கான தேர்தலில் தபால்மூலவாக்களிப்பு முடிவுகளின்படி ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி புத்தளம், குருநாகல் ஆகிய இருமாவட்டங்களிலும் முன்னணியில் உள்ளது.

இத் தேர்தலில் 50வீதமானோர் வாக்களித்திருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

வடமேல்மாகாண சபைக்கு 50 உறுப்பினர்களை தெரிவுசெய்வதற்காக12 கட்சிகளையும், 07சுயேட்சைக்குழுக்களையும் பிரதிநிதித்துவப்படுத்தி 629 வேட்பாளர்கள் தேர்தலில் போட்டியிட்டனர்.

இந்தத் தேர்தலில் வாக்களிப்பதற்காக குருநாகல் மாவட்டத்தில் 10இலட்சத்து 39ஆயிரத்து 482பேர் தகுதி பெற்றனர். இதற்காக 817 வாக்களிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

இம்முறை தேர்தலில் புத்தளம் மாவட்டத்தில் வாக்களிப்பதற்காக 4இலட்சத்து 50ஆயிரத்து 57பேர் தகுதி பெற்றிருந்தனர். இதற்காக மாவட்டத்தில் 387 வாக்களிப்பு

(8ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### தவறிவிட்டது

கணபதிப்பிள்ளை கோபப்பெருந்தேவி என்பவருடைய அ.அட்டை தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் செல்வி உதிரிகள் வாணிபம் என்னும் இடத்தில் கொடுக்கவும் அ.நம்பர் 568163966V (4463)

### புதிய பிரிவு ஆரம்பம்

கேம்பிறிஜ் கல்லூரி கிளிநொச்சி A/L 2006,2005 இரசாயனவியல் வகுப்பு 28.04.2004 மாலை 4.00 மணிக்கு ஆரம்பம் ஆசிரியர் திரு.சண் (சி.9382)

### விளையாட்டுப் போட்டி

துணுக்காய் பிரதேச விளையாட்டுக் கழகங்களுக்கான விளையாட்டுப் போட்டி எதிர்வரும் 27ம் திகதி செவ்வாய்க்கிழமைபி.ப. 3.00 மணிக்கு மு.மல்லாவி மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது துணுக்காய்ப் பிரதேசத்தைச் சேர்ந்த சகல விளையாட்டுக் கழகங்களும் இதில் பங்கு கொள்ளுமாறு பிரதேச செயலாளர் கேட்டுக்கொள்கின்றார். (24)

### இடம்மாற்றம்

ஸ்கந்தபுரத்தில் இயங்கி வந்த பிக்பென்ஸ் (வாணிபுத்தகசாலை) டிப்போ வீதி வன்னியன் தொலைத்தொடர்பு நிலையத்துக்கு அருகாமையில் இயங்கிவருகின்றது. என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றேன். (9454)

## காடு வளர்ப்பு

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன சூழல் பாதுகாப்பு பிரிவினரால் நடாத்தப்படும் சமுகக் காடு வளர்ப்புத்திட்ட ஆரம்ப விழா பளைப் பிரதேச மாசார் கிராமத்தில் நடைபெறவுள்ளது.

நாளைகாலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ள இந்நிகழ்வில் கிளி. அரச அதிபர் தி.இராசநாயகம் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு சமுக காடு வளர்ப்புத் திட்ட பெயர்ப் பலகையினை திரை நீக்கம்செய்து வைக்கவுள்ளார்.மேற்படி காடு வளர்ப்புத் திட்டத்தில் அன்றைய தினம் தேக்கு, மலைவேம்பு, வேம்பு, இலுப்பை போன்ற பயன்தரு மரங்கள் நாட்டி வைக்கப்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# சட்டவிரோதமாக மணல் ஏற்றுவோரிடம் பிரதேசசபை குற்றப்பணம் அறவீடு

(அலுவலகசெய்தியாளர்)

அனுமதி இன்றி உழவு இயந்திரத்தில் மணல் ஏற்றிய நபருக்கு கரைச்சிப் பிரதேச சபையினரால் குற்றப்பணம் அறவிடப் பெற்றது.

மேற்படி சம்பவம் கடந்த வெள்ளியன்று கிளி/கனகாம்பிகைக்குளப் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

மேற்படி பகுதியில் களவாக மண் ஏற்றப்பட்டு வருவதாக கரைச்சிப் பிரதேசசபை விசேட ஆணையாளருக்கு அப்பிரதேச மக்கள் தெரிவித்ததைத் தொடர்ந்து. விசேட ஆணையாளர் பொன் நித்தியானந்தனின் பணிப்புரைக்கமைவாக அனுமதியின்றி மண்ஏற்றுவோர் மீது மேற்படி திடீர் நடவடிக்கை மேற்கொள்ளப்பெற்றபொழுது சட்டவிரோதமாக அனுமதியின்றி மணல் ஏற்றிவந்த உழவு இயந்திர உரிமையாளரிடம் குற்றப்பணமாக ரூபா 500 பிரதேசசபையினரால் அறவிடப்பட்டுள்ளது.

அனுமதியின்றி மணல் ஏற்றுவோர் மீது கரைச்சிப் பிரதேச சபையினர் தொடர்ந்து நடவடிக்கையினை மேற்கொள்ளும் பொருட்டு கரைச்சி பிரதேசசபையினருக்கு பணிப்புரை விடுத்துள்ளதாக கரைச்சிப் பிரதேசசபை விசேட ஆணையாளர் தெரிவித்துள்ளார். (சோ)

## முல்லை. மாவட்டத்தில் நாளைமுதல் கட்டாக்காலி நாயொழிப்பு

முல்லை. மாவட்ட தமிழீழ சுகாதார சேவையினரின்ஏற்பாட்டில் முல்லை. மாவட்ட சுகாதார சேவைப்பணிமனையினர், பிரதேச சபையினர் இணைந்து எதிர்வரும் 26,27,28,29,30 ஆகிய நாட்களில் கட்டாக்காலி நாய் ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபடவுள்ளனர்.

முதற்கட்டமாக 26-28 வரை விழிப்புணர்வுக் கருத்துக்களும், வளர்ப்பு நாய்களுக்கான தடுப்பூசி வழங்கலும் நடை பெறும் 29,30 ஆகிய இரு நாட்களும் நாயொழிப்பு நடைபெற உள் ளது.

அத்துடன் கட்டாக்காலி நாய்களை உயிருடன் பிடித்து தரவிரும்பும் பொது மக்கள் அந்தப்பகுதி பிரதேசபையுடன்தொடர்பு கொண்டு பணியாற்றலாம் என்பதையும் அதற்கான வேதனம் வழங்கப்படும் எனவும் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தெரிவித்துள்ளார். (20)

### திறப்புவிழா

(முல்லைத்தீவு)

முல்லை. தெற்கு பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம் நிர்மாணித்திருக்கும் பனை வெல்ல உற்பத்தி நிலையம் நாளை முற்பகல் 11மணிக்கு செம்மலை தலைமைக்காரியாலய வளாகத்தில் நடைபெறவுள்ளது.

முதன்மை விருந்தினராக முல்லை. மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், சிறப்பு விருந்தினராக கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எ.சின்னத்தம்பி,உட்படபலர்கலந்து கொள்ளவுள்ளமைகுறிப்பிடத்தக்கது.(20)

### அறிமுக நிகழ்வு

(அலுவலகசெய்தியாளர்)

இலங்கை விகடன் வார செய்திப் பத்திரிகை பங்குகள் அறிமுக நிகழ்வு யாழ். பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் இடம் பெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக உபவேந்தர் எஸ்.மோகனதாஸ் தலைமையில் இன்று பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெறவுள்ள மேற்படி நிகழ்வில் தொடக்கவுரையினை காங்கேசன் துறை மக்கள்வங்கிக்கிளை முகாமையாளர் பொன்.கணேச மூர்த்தியும், தொகுப்புரையினை யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் எஸ்.சண்முகதாஸ் அவர்களும் வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

### முன்பள்ளிகளுக்கான கலந்துரையாடல்

(வவுனியா)

வவுனியா தெற்கு வலய சிங்களப்பிரதேச பிரிவு முன்பள்ளிகளுக்கான மாதாந்த கலந்துரையாடல் உதவிக்கல்விப் பணிப்பாளர் எஸ்.கணேசபாதம் தலைமையில் நேற்றுக்காலை 10.00மணியளவில் காமினி மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் வலய இணைப்பாளர் திருமதி சி.அருள்வேல்நாயகி, பிரதேச இணைப்பாளர்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இக்கூட்டத்தில் மழலைகளின் திறனாய்வில் (விளையாட்டுப் போட்டி) கலந்துகொள்ளும் குழந்தைகளுக்கு சான்றிதழ் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது இம்மாதம் வலய ரீதியாக கற்றல் உபகரண கண்காட்சி நடைபெற்று அதில் தெரிவு செய்யப்படும் 3பாடசாலைகள் வடகிழக்கு மாகாண ரீதியாக இடம்பெறவிருக்கும் கண்காட்சிக்கு கொண்டுசெல்ல இருக்கின்றோம் என தலைவர் எஸ்.கணேசபாதம் தெரிவித்தார்.

## மூன்றாண்டு நினைவில்

ஈன்றவள் மடியில் 24 12 1983



ஈழத்தாய் மடியில் 25 04 2001

### 2 ஆம் லெப். விஜிதா

(மாலதி சிறப்புப் படையணி)

(கணபதிப்பிள்ளை புஸ்பறஞ்சி)

நட்டாங்கண்டல்.

கல்லறையில் கண்துயிலும் காவியமே
தாயின் மடியில் தவழ்ந்து
கரிகாலன் சேனையில் இணைந்து
உன் உயிரை ஈகம் செய்து
மூன்றாண்டுகள் சென்றாலும்
ஆறாது உன் நினைவுகள்.

(சி.9388)

குடும்பத்தினர்,
நட்டாங்கண்டல்

## 3 ஆம் ஆண்டு நினைவலைகள்

தாயின் மடியில் * 1983 * 11 * 29



தாயக மண்ணில் * 2001 * 04 * 25

### லெப். மதனா

மாலதி சிறப்புப் படையணி (50கலிபர்)

யாழ். எழுதுமட்டுவாள் பகுதியில் தீச்சுவாலை 1ல் வீரச்சாவடைந்தார்.

அருள் மலைநாதன் ஷாமளா (ஷாமா)

மாணவன் தூங்கினால் தாயகம் தூங்கும் என்பர் கல்வியை இடையில் நிறுத்தினாய் அன்னை மண் மீட்கச் சென்றாய் களம்பல கண்டாய் தீச்சுவாலையை தடுத்து நிறுத்த விரைந்தாய் உன் இன்னுயிர் ஈர்ந்தே வித்தானாய் உன் துயர் தாங்க முடியாது உன் குடும்பத்தினர் தவித்து உருகிய வண்ணம் உன் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

இவருடன் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட அனைத்து மாவீரருக்கும் இந்நாளில் நினைவு கூறுகிறோம்.

25-04-2004 அன்று எமது இல்லத்தில் நடைபெறும் நிகழ்வில் அனைத்துப்போராளிகள், உற்றார், உறவினர், நண்பர்கள், ம.த. பகுதி ஊழியர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்:-
குடும்பத்தினர்
அருள் மலைநாதன்
சாந்தினி சாந்தநாதன்
வினோதா, ஜீவனா

2ஆம் பண்ணை,
கனகபுரம்,
கிளிநொச்சி.

(4462)

## தகவல் தொழில்நுட்ப போதனாசிரியர் பதவிக்கான ஆட்சேர்ப்பு

***தொழிற்பயிற்சி அதிகாரசபையின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்தில் நடாத்தப்பட உள்ள தகவல் தொழில்நுட்ப பயிற்சி நெறியின் போதனாசிரியராக கடமைபுரிவதற்கென கீழ்வரும் தகைமை உடையோரிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.***

01 பதிவு செய்யப்பட்ட நிறுவனம் ஒன்றில் இருந்து கணினி தகவல் தொழில்நுட்பத்தில் ஆகக்குறைந்தது ஒருவருட கால டிப்பிளோமா தேர்ச்சி பெற்றிருப்பதுடன், இரண்டு வருடங்களுக்கு குறையாத கற்பித்தல் அனுபவத்தினையும் கொண்டிருத்தல் வேண்டும்.

02 விண்ணப்பதாரி கிளிநொச்சி மாவட்டத்தில் வதிபவராக இருத்தல் வேண்டும்.

03 சம்பளம் பேசித் தீர்க்கப்படும்.

**விண்ணப்பதாரிகள் சுயமாக விண்ணப்பங்களைத் தயாரித்து அரசாங்க அதிபர், திட்டமிடல் அலுவலகம்,கச்சேரி,கிளிநொச்சி எனும் முகவரிக்கு 2004.04.30ஆம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கவும்**

*தி.இராசநாயகம்,*
*அரசாங்க அதிபர்,*
*கிளிநொச்சி மாவட்டம்.*

(சி.9459)

## 6 ஆம் ஆண்டு நீங்காத நினைவில்

தாய் மண்ணில் முத்தாக 1979 * 12 * 24



தாய் மண்ணில் வித்தாக 1998 * 04 * 25

சம்பவம்: — 1998 ஆம் ஆண்டு மூன்றுமுறிப்புப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்துடனான நேரடி மோதலின் போது...

### 2ம் லெப். முத்தப்பன்

**கனகராசா(அருமை) — கமலநாதன்**

நெடுந்தீவு மேற்கு

தாய் மண் விடுதலையை நெஞ்சினில் சுமந்து
தானைத் தலைவன் அணி புகுந்த - மகனே
வீரத்தோடு சமராடி சுவர்க்கம் அடைந்து ஆறு ஆண்டானது
விழிகள் கண்ணீரினால் மலர் சொரிந்து உன் நினைவை
நெஞ்சினில் சுமந்து நிற்கும்

அப்பா,அம்மா
தங்கை, தம்பி,
அண்ணா,சித்தப்பாமார்,
சித்திமார்,மாமாமார்,
மாமிமார்,மச்சான்மார்

தமு. முத்தையன் கட்டு,
இடது கரை,
மூன்றாம் கண்டம்,

(சி.7190)



திரிபுராவில் நேற்று முன்தினம் இரண்டாவது கட்ட வாக்குப்பதிவு நடந்து முடிந்துள்ளது. இதன்போது அங்குள்ள அகர்தலாவில் உள்ள வாக்குச் சாவடி ஒன்றில் மக்கள் வரிசையில் வாக்களிக்க நிற்பதையும் பாதுகாப்பிற்காக கையில் துப்பாக்கியுடன் பொலிசார் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# பொடோ சட்டம் குறித்த வாக்குறுதியை வாஜ்பாயும், அத்வானியும் காப்பாற்றவில்லை

## தி.மு.க.தலைவர் கருணாநிதி குற்றச்சாட்டு

(சென்னை)

**பொடோ சட்டம் தவறாக பயன்படுத்தப்படுவதை அனுமதிக்க மாட்டோமென பிரதமர் வாஜ்பாயும், துணைப்பிரதமர் அத்வானியும் கூறிய வாக்குறுதியை அவர்கள் நிறைவேற்றாததாலேயே பா.ஜ.கட்சியிலிருந்து தி.மு.க. வெளியேறியது. இவ்வாறு தி.மு.க. தலைவர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.**

நேற்றுமுன்தினமிரவு கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அத்துடன் பொடோ சட்டத்தை தவறாக பயன்படுத்துகின்ற மாநில அரசை தட்டிக்கேட்போமென காலஞ்சென்ற முரசொலிமாறனிடமும் ம.தி.மு.க.பொதுச் செயலாளர் வைக்கோவிடமும் இவர்கள் உறுதியளித்தனர். ஆனால் இவற்றை அவர்கள் நடைமுறைப்படுத்தவில்லையென அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

# அ.தி.மு.க – பா.ஜ.கூட்டணி மக்கள் ஆதரவை இழந்து விட்டது

## - ம.தி.மு. கழகத் தலைவர் வைகோ

(சென்னை)

அ.தி.மு.கட்சி-பா.ஜ.கட்சி கூட்டணி மக்களின் ஆதரவை இழந்து விட்டதென ம.தி.மு.க பொதுச்செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் சென்னையில் தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நான் இதுவரை 24 முறை சிறைக்குச் சென்றுள்ளேன். ஆனால் இதில் இரண்டு தடவை திராவிடமுன்னேற்றக்கழகம் நடத்திய போராட்டத்தில் பங்குபற்றி சிறைக்குச்சென்றுள்ளேன். மிகுதி 22 தடவையும் பொதுமக்களின் பிரச்சினைகளுக்காக சிறைக்குச் சென்றுள்ளேன். ஆனால் ஊழல் வழக்கு சம்பந்தமாக கைதுசெய்யப்பட்டு சிறைக்குச்செல்லவில்லையென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# விசச்சாராயம் அருந்திய மூவர் சென்னையில் மரணம்

(சென்னை)

சென்னையில் விசச்சாரயம் அருந்திய மூவர் பரிதாபமாக மரணமடைந்தனர்.

சென்னை சென்றல் ரயில் நிலையம் அருகே உள்ள அல்லிக்குளம் கிராமத்தில் இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவத்தையடுத்து அக்கிராமத்தை சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்திய சென்னைக் காவல்த் துறையினர் விசச்சாராயம் விற்பனை செய்த பெண்மணி உள்ளிட்ட 6பேரைக் கைது செய்துள்ளனர்.

# வாக்குறுதியைக் காப்பாற்ற இஸ்ரேலிடம் அமெ.கோரிக்கை

(ஜெருசலேம்)

பலஸ்தீன சனாதிபதி யசீர் அரபாத்திற்கு தாம் தீமை எதனையும் விழைவிக்கப்போவதில்லையென இஸ்ரேலியப்பிரதமர் ஏரியல் ஷரோன் கூறியுள்ள வாக்குறுதியை காப்பாற்ற வேண்டுமென வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.

எனது வாக்குறுதியை நான் தொடர்ந்து கடைப்பிடிக்கப்போவதில்லையென ஷரோன் கூறியதைத் தொடர்ந்து இக்கோரிக்கையை வெள்ளை மாளிகை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தமிழகத்தில் மக்களவைத் தேர்தல் 39 தொகுதிகளில் 752 பேர் போட்டி

(சென்னை)

நடைபெறவுள்ள இந்திய மக்களவைத்தேர்தலில் தமிழகத்தில் 39 தொகுதிகள் போட்டியிட 752 பேர் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர்.

மேற்படி தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல் செய்யும் இறுதி நாள் நேற்று முன்தினத்துடன் முடிவடைந்துள்ளது.

இதேவேளை வேட்பு மனுத்தாக்கல் செய்வதற்கான இறுதி நாளில் மட்டும் 319 பேர் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர்.

இது இவ்வாறிருக்க இடைத் தேர்தல் நடைபெறவுள்ள மங்களூர் தனிசட்டப்பேரவை தொகுதியில் போட்டி இட17 பேர் வேட்புமனுத் தாக்கல் செய்துள்ளனர்.

வேட்பு மனுக்களை திரும்பப் பெற நாளை இறுதி நாளெனவும் அன்று மாலையே இறுதி வேட்பாளர் பட்டியல் வெளியிடப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.




ஈராக்கின் பலூஜா நகரில் புதிய தாக்குதலுக்குத் தயாராகும் அமெரிக்கக் கடற்படை அணி ஒன்றின் வாகனத்தையே படத்தில் காண்கின்றீர்கள்.

# ஈராக்கில் இதுவரை 510 அமெ. படையினர் பலி

(பாக்தாத்)

பாக்தாத்திற்கு வடக்கே வீதியோரத்தில் நேற்று முன்தினம் குண்டு வெடித்துள்ளது. இச்சம்பவத்தில் அமெரிக்கப்படை வீரர் ஒருவர் உயிரிழந்துள்ளார். கடந்த ஆண்டு மார்ச் மாதம் அமெரிக்கப்படையினர் ஈராக்கை ஆக்கிரமித்த நாளிலிருந்து நேற்றுமுன்தினம் வரை 510 அமெரிக்க படையினர் உயிரிழந்துள்ளது குறிப்பிடத்தக்கது. ஈராக் போர் முடிவடைந்து விட்டது என்று புஷ் கூறியபோதும் அங்கு நாளாந்தம் அமெரிக்க கூட்டணிப்படைகள் தாக்குதல்களை எதிர்நோக்கியபடியேயுள்ளனர். ஆனால் ஈராக்கில் தாக்குதல்கள் கூட்டணிப்படைகளுக்கு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தவில்லை என்று அமெரிக்கா கூறிவருகின்றமை அவதானிக்கத்தக்கதொன்று.



சிட்னியிலுள்ள புகைப்படப் கலையகத்தில் சீன மக்கள் விடுதலை இராணுவத்தின் நடவடிக்கைகளை சித்திரங்கள் மூலம் வரைந்துகாட்டி அதன் முன்னால் காட்சிதரும் சீன ஓவியக் கலைஞர் குவாஜியன்.

# ஜுனுக்குப் பின்னரும் கூட்டணி நாடுகள் ஈராக்கில் படைகளை வைத்திருக்கும்

## -அமெ. சனாதிபதி புஷ் நம்பிக்கை

(பாக்தாத்)

ஈராக்கிற்கு படைகளை அனுப்பியுள்ள நாடுகள் ஜுன் மாதத்திற்குப் பின்னரும் அவற்றின் படைகளை ஈராக்கில் வைத்திருக்குமென நம்புவதாக அமெரிக்க சனாதிபதி புஷ் தெரிவித்துள்ளார்.

ஈராக்கில் படைகளை நிறுத்தியுள்ள நாடுகளின் தூதுவர்கள் அண்மையில் சந்தித்த அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் ஈராக்கில் படைகளைத் தொடர்ந்து வைத்திருக்குமாறுகோரிக்கை விடுத்திருந்தார். இதனையடுத்தே சனாதிபதி புஷ் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

அமெரிக்காவின் வேண்டுகோளை நிராகரித்துள்ள நோர்வே ஈராக்கில் ஜுன் மாதம் 30ஆம் திகதி இடைக்கால அரசாங்கம் பதவியேற்பதைத் தொடர்ந்து தனது படைகளைத் திருப்பி அழைக்கப்போவதாகத் தெரிவித்துள்ளது.

இதேவேளை, ஈராக்கில் தாக்குதல்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. இவற்றை கட்டுப்படுத்த முடியாது கூட்டணிப் படைகள் திணறி வருகின்றன.

இதனால்தான், ஸ்பெயின், தாய்லாந்து, டொமினிக்கன் குடியரசு, ஹொண்டரஸ் ஆகிய நாடுகளும் தமது படைகளைத் திருப்பி அழைக்க உள்ளதாக கூறியுள்ளன.

எதிர்வரும் ஜுன் 30ஆம் திகதிக்குள் ஈராக்கின் நிர்வாக விடயங்களில் ஐ.நா. தலையிடாது விட்டால் ஸ்பெயின் தமது படைகளை உடன் திருப்பி அழைக்கும் என்று புதிய பிரதமர் ஜோஸ் லூயிஸ் ரொட்ரிக்கஸ் செபடாரியோ கால எல்லைவிதித்துள்ளார்.

ஆனால், ஈராக்கில் புனரமைப்புப் பணிகளுக்கும் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட ஈராக்கியர்களுக்கும் ஸ்பெயின் தொடர்ந்தும் உதவி வழங்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

ஈராக்கில் 1400 ஸ்பெயின் படையினரும், 370 ஹொண்டரஸ் படையினரும் அமெரிக்க கூட்டணிப் படையில் அங்கம் வகிக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, அமெரிக்கக் கூட்டணிப் படைகளில் போலந்து, பிரிட்டிஷ், தென்கொரியா, அவுஸ்திரேலியப் படைகளும் உள்ளன.

# பிரிட்டனிலும் அ.அட்டை

(லண்டன்)

பிரிட்டனின் பாதுகாப்பு அச்சம் காரணமாக பிரிட்டன் மக்கள் இனி மேல் அடையாள அட்டையைக் கொண்டு செல்லுமாறு கேட்கப்படவுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

ஐரோப்பிய நாடுகளில் இந்த நடைமுறை ஏற்கனவே அமுலில் உள்ள போதிலும் பிரிட்டனில் யுத்த காலங்களில் மட்டுமே அடையாள அட்டை கொண்டு செல்லும் வழக்கம் இருந்து வந்தது.

ஆனால் பிரிட்டனில் தற்போது பயங்கரவாதத்தாக்குதல் அச்சம் நிலவுவதால் பாதுகாப்பிற்கு உதவும் முகமாக மக்கள் அடையாள அட்டையை எடுத்துச்செல்லுமாறு கேட்கப்பட்டுள்ளதாக உள்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.



சன் பிரான்சிஸ்கோ குடாவில் நீர்ப்பரப்பில் பறக்கும் சாகச விளையாட்டில் ஈடுபட்டுள்ள வீரர் ஒருவர்.



# அமெரிக்காவுக்கு ஈராக் மற்றொரு வியட்னாம்...?

ஈராக்கில் நிலைமைகள் படுமோசமாக உள்ளது. அதிலும் முக்கியமாக அமெரிக்க கூட்டணிப்படைகள் தமது உயிரைக்கையில் பிடித்து வைத்திருப்பது போன்ற உச்சக்கட்ட பீதியில் இருக்கின்றார்கள். அந்தளவிற்கு இலக்குகளை சரியான முறையில் குறிவைத்து நடத்தப்படுகின்ற தாக்குதல்களால் ஈராக் அதிர்கின்றது.

ஆட்டம் கண்டுவிட்டது நிர்வாகம் என்று கூறுவது தற்போது அமெரிக்க சனாதிபதிக்கு மிகவும் அழகாக பொருந்தியுள்ளது. ஏனெனில் ஈராக் விடயமாக எந்தப்பக்கத்தால் நடவடிக்கை எடுப்பது என்பதில் அவர் ஆடித்தான் போயுள்ளார். இதை எவராலுமே மறுக்க முடியாது.

ஈராக்கில் இதுவரை பாக்தாத்தை மட்டுமே மையமாக வைத்து ஷியா-ஷன்னி முஸ்லிம்கள் தாக்குதலை நடத்தி வந்தனர். தற்போதைய தாக்குதல் நிலை மாறிவிட்டது. ஈராக்கின் நாலாபுறமும் தாக்குதல்கள் பரவலாகத் தொடரப்படுகின்றது.

ஒரு நகரின் ஏதோ ஒரு பகுதியில் மட்டுமே இதுவரை தாக்குதல் நடத்தப்பட்டது. அதனால் அமெரிக்க கூட்டுப்படையினருக்கு எதிர்தாக்குதலும், முறியடிப்பும் ஓரளவு இலகுவாக இருந்தது. ஆனால் தற்போது எங்கே எப்போது..... தாக்குதல் நடக்கும். அது காலையிலா ..... மாலையிலா.... நள்ளிரவிலா.... போன்ற கிலியையும் கூட்டணிப்படைகளுக்கு ஏற்படுத்தி விட்டது.

இதனால் கூட்டணிப்படைகள் நாளாந்தம் பயத்தினால் வெந்து கொண்டிருக்கிறார்கள் என்பதே உண்மையான அங்குள்ள நிலை.

சதாம் ஹுசைன் ஆட்சி பறிக்கப்பட்டு, கைது செய்யப்பட்டதுடன் ஈராக்கில் சிக்கல்கள் முடிவுக்கு வந்து விட்டது. ஈராக் தம் கைவசம் அடக்கப்பட்டு விட்டது எனும் அமெரிக்க சனாதிபதியின் கனவு கனவாகவே யுள்ளது.

அதுமட்டுமன்றி ஷியா -ஷன்னி முஸ்லிம்களிடையே மோதலை உருவாக்குவதன் மூலம் ஈராக்கில் ஒரு பொம்மையாட்சியை நிலை நாட்டுவது தான் அமெரிக்காவின் இலட்சியமாகக் கூட இருந்தது.

ஆனால் இன்று எல்லாமே நிர்மூலமாகிப் போய்க் கொண்டிருக்கிறது. ஈராக்கில் என்னதான் நடக்கின்றது. ..? என்ற புரியாத புதிர்க அமெரிக்கா விடை தேடுகின்றது. ஆனால் பதில் கிடைப்பதற்கான வழிகளைத் தான் காணமுடியவில்லை.

இதனிடையே ஈராக்கில் மனதை உலுக்கும் சம்பவமொன்று நடந்து முடிந்திருக்கிறது. வாகன தொடரணி மீது கிரனைட் வீசப்பட்டதில் ஈராக் கட்டுமானப்பணிகளில் ஈடுபட்ட 3 ஊழியர்கள் கொல்லப்பட்டுள்ளனர். ஒருவர் உயிர் தப்பினார். தப்பியவரை பொதுமக்கள் கற்களால் அடித்தே கொன்று விட்டார்கள். 50 ற்கும் மேற்பட்ட கிளர்ச்சியாளர்கள் சேதமாக்கப்பட்ட வாகனத்துக்கு தீ மூட்டியுள்ளனர். உள்ளுக்குள் இருந்த உடல்களும் அரைகுறையாக எரிந்து போயின.

தீமூட்டியவர்களில் ஒருவர் "பலூஜா அமெரிக்கர்களின் சமாதி" எனும் பதாகை ஒன்று கையில் வைத்திருக்கின்றார்.

வாகனங்கள் எரிந்து முடிந்ததும் உள்ளுக்குள்ளிருந்த உடல்களை கிளர்ச்சியாளர்களும், பொதுமக்களும் இழுத்து வெளியே போட்டனர்.

அத்துடன் நின்றுவிடவில்லை அவர்கள் தலைபற்றும், உடல் கருகியும் இருந்த உடல்களை தாக்கினார்கள். "கடவுள் மிகவும் நல்லவர்" என்று கோஷமிட்ட அவர்கள் கயிறுகளால் அந்த உடல்களை கட்டி வீதிகளில் இழுத்தனர்.

அவர்களது கோபம் அடங்கவில்லை என்பதற்கு சான்றாக அந்த உடல்களை வீதிவீதியாக ஊர்வலமாக இழுத்துச் சென்றார்கள்.

பின்னர் அவர்கள் நான்கு உடல்களையும் ஒன்றாகக் கட்டி யூப்பிரஸ் ஆற்றின் மீது தொங்க விட்டார்கள். கோஷமிட்டார்கள் வருவோரும், போவோரும் மாறி மாறி அந்த உடல்கள் மீது தாக்கினார்கள். இது கதையல்ல. பலூஜாவில் இம்மாத முற்பகுதியில் நடந்த உண்மைச்சம்பவம்.

இந்த ஒரு சம்பவமே போதும் ஈராக்கில் அமெரிக்க கூட்டணிப்படைகளுக்கு எதிரான எதிர்ப்பு எப்படி இருக்கிறது. என்பதைப் புடம் போட்டுக்காட்ட

அதுமட்டுமன்றி பலூஜா சம்பவத்தை பார்த்த சர்வதேச சமூகம் அதிர்ச்சியில் இருந்து மீண்டு வருவது இயலாத காரியம். இந்த சம்பவத்தை தொலைக்காட்சியில் பார்த்த அமெரிக்கர்கள் பீதியில் உறைந்து போனார்கள். புஷ் நிர்வாகத்தின் மீது மிகுந்த கோபம் கொண்டுள்ளார்கள்.

முன்பு சோமாலியாவிலும் இதுபோன்றே அமெரிக்காப்படைகள் இழப்பை சந்தித்தது. படையினர் வீதிவீதியாக இழுத்துச்செல்லப் பட்டனர். இதனை பார்த்த மறுநிமிடம் அப்போதைய அமெரிக்க சனாதிபதி கிளின்டன் நிர்வாகம் உடனடியாக தனது படையினரை திருப்பியழைத்துக்கொண்டது.

ஆனால் ஈராக் விடயம் சோமாலியா போல அல் என்பதையும் ஒத்துக்கொள்ள வேண்டும் னில் அமெரிக்க கூட்டணிப்படை ள் ஈராக்கில் எங்கிருந்து தாக்குதல்கள் தொடரப்படுகின்றன என்று திக்குத் திசை தெரியாமல் தடுமாறி வருகின்றன.

அத்துடன் இத்தகைய தாக்குதல்களை சதாம் ஹுசைன் ஆதரவாளர்கள் மேற்கொள்கின்றார்களா... அல்லது ஏனைய முஸ்லிம் நாடுகள் மேற்கொள்கின்றதா என்று அமெரிக்க இராணுவம் திண்டாடி வருகின்றது.

அல்லது இரண்டு சக்திகளும் இணைந்துதான் இந்தத்தாக்குதல்களை துல்லியமாக முன்னெடுக்கின்றதா? எனும் சந்தேகமும் குழப்பமும் கூட அமெரிக்காவை ஆட்டிப் படைக்காமல் இல்லை.

இதேசமயம் பலூஜா சம்பவம் பல கேள்விகளையும் எழுப்பியுள்ளது. இது வெறும் தனிச்சம்பவமா? அல்லது தொடரப்போகும் பலத்த தாக்குதலுக்கு அறிகுறியா...? என்பதே அவை.

அதுமட்டுமன்றி ஷியா-ஷன்னி முஸ்லிம்கள் வெளிநாட்டவர்களை கடத்தும் முயற்சியிலும் ஈடுபட்டு வருகின்றார்கள். இதுவரை 50 வெளிநாட்டவர்கள் கடத்தப் பட்டுள்ளார்கள். இவர்களில் பலர் விடுவிக்கப்பட்டுள்ளனர். சிலர் இன்னும் விடுவிக்கப் படவில்லை.

கடத்தப்பட்டவர்கள் இத்தாலி யப்பான் கனடா போன்ற பல நாடுகளைச் சேர்ந்தவர்கள்.

ஈராக்கில் அமெரிக்க படையுடன் கூட்டணி வகிக்கும் படைகள் உடனடியாக விலக வேண்டும் என்பதே வெளிநாட்டவர்களைக் கடத்திச் செல்லும் ஷியா ஷன்னி முஸ்லிம்களின் கோரிக்கை.

கோரிக்கை மறுக்கப்பட்டால் கடத்தப் படுபவர்கள் கொல்லப்படுவார்கள். உயிருடன் எரிக்கப்படுவார்கள் என்பது அவர்களது எச்சரிக்கை இந்த வகையில் தான் இத்தாலி பிரஜை ஒருவர் கொல்லப்பட்டுள்ளார்.

இதனையடுத்து ஈராக்கின் புனரமைப்புக்கு உதவிய நாடுகளும், பாதுகாப்புக்கு உதவிய நாடுகளும் கிலி கொண்டுள்ளன. உடனேயே தமது படைகளை திருப்பியழைக்கப்போவதாக அறிவித்திருக்கிறன.

ஏற்கனவே ஸ்பெயின் தனது படையினரை திருப்பி அழைக்கும் பணியை ஆரம்பித்துள்ளது. ஹொன்டரஸ் தனது படைகளை திருப்பி அழைக்கப்போவதாக கூறுகின்றது. ரஷ்யா ஈராக்கில் தொழில் புரியும் தமது நாட்டவர்களை கட்டம் கட்டமாக திருப்பி அழைத்துக்கொண்டிருக்கிறது. தாய்லாந்து தனது 451 மருத்துவ பொறியியல் இராணுவத்தினரையும் அழைப்பதில் ஆலோசனை நடத்தி வருகின்றது.

இத்தகையதோர் நிலைமை அமெரிக்காவுக்கு பலத்த பின்னடைவை ஏற்படுத்த வல்லது. அதேநேரம் ஈராக்கில் ஏனைய நாட்டு இராணுவத்தினர் பாதுகாப்புக்கு துணை புரிவதனால் தான் அமெரிக்க இராணுவம் ஓரளவு துணிவுடன் இதுவரை ஈராக்கை வலம் வந்தது.

ஆனால் ஸ்பெயின் ஆரம்பித்துள்ள தனது படைகளை வாபஸ் பெறும் நடவடிக்கை தொற்றுநோய் போல ஏனைய நாடுகளுக்கும் நிச்சயம் பரவுவதற்கு அறிகுறிகள் காட்டப் பட்டு வருகின்றன.

இதன்போது அமெரிக்க-பிரிட்டிஷ் படையினர் மட்டுமே ஈராக்கில் இருக்க வேண்டிய நிலை ஏற்படும். அப்போது படையினர் விரக்தியடையக் கூடும். விட்டுவிட்டு ஓடவும் கூடும். ஏற்கனவே பல நகரங்களை ஷியா-ஷன்னி முஸ்லிம்கள் கைப்பற்றிவிட்டதாக அமெரிக்க இராணுவ அதிகாரி ஒப்புக்கொண்டுள்ளார்.

அத்துடன் தாக்குதல்களின் உக்கிரம் தான் இதற்குக் காரணம் என்பதையும் அவர் மறுக்கவில்லை.

தொடரும் தாக்குதல்கள் அமெரிக்க இராணுவம் குதிக்கால் பிடரியில் இடற ஓடுவதற்குத்தான் அடிகோலுகின்றன.

ஆனால், அமெரிக்க சனாதிபதியோ தனது படைகள் ஈராக்கைவிட்டு வெளியேறுவதில் துளி கூட ஆர்வத்தைக் காட்டவில்லை. ஈராக்கை முழுமையாகத் தம் கைக்குள் பிடித்து வைப்பதில்தான் அவர் பேரார்வம் காட்டுகின்றார். அதற்காக மேலும் 10 ஆயிரம் படையினரை அனுப்பவும் முடிவு செய்துள்ளார்.

அது மட்டுமன்றி ஈராக்கை யூன் மாதம் ஈராக்கியர்களிடம் ஒப்படைக்க முடிவு எடுத்துள்ளதாக அமெரிக்க சனாதிபதி புஷ் கூறியுள்ளார்.

ஆனால், ஈராக் ஈராக்கியர்களிடம் ஒப்படைக்கப்பட்டாலும் கூட ஈராக்கிலிருந்து அமெரிக்க இராணுவம் வெளியேறமாட்டாது. ஈராக்கில் சனநாயகம் மலரும் வரை அங்கு படைகள் இருக்கும். இதுவும் அவரது முடிவின் மற்றொரு பகுதி.

ஆக.... ஈராக் ஈராக்கியர்களிடம் ஒப்படைப்பதாக புஷ் கூறுவது வெறும் கேலிக் கூத்தே. அமெரிக்கப் படைகள் அங்கிருக்குமெனில், ஈராக்கை அமெரிக்கா தான் ஆளுமே தவிர, ஈராக்கை ஈராக்கியர்கள் ஆளுவது என்பது வெறும் வாய் வார்த்தை மட்டுமே.

அதாவது ஈராக்கில் வெறும் கண்துடைப்பு ஆட்சியை சர்வதேசத்திற்குக் காட்டிவிடுதல் மூலம் மறைமுகமாக எண்ணெய் வளத்தை தனதாக்கிக்கொள்வதுதான் அமெரிக்காவின் வெளியே சொல்லாதத்திட்டம்.

அதனால்தான் எந்தக் காரணத்தைக் கொண்டும் தனது படையினரை திருப்பியழைக்க அமெரிக்கா நினைக்கவில்லை.

கூட்டணிப்படைகள் வாபஸ்பெறும் எனும் நிலை உருவாகிவிட்டது என்பதனால்தான் மேலும் மேலும் அந்த இடத்தை நிரப்பப் படையினரை அமெரிக்கா அனுப்புவதில் முனைப்பாய் இருக்கின்றது.

எவ்வளவு இழப்பைக் கண்டாலும் கூட, அமெரிக்கா, தனது படைகளை வாபஸ் பெறுமா என்பது சந்தேகமே.

ஏனெனில் அமெரிக்கா தலைகுனிவை விரும்புவதில்லை. எண்ணெய் வளத்தையும் விட்டுக்கொடுப்பதற்கில்லை. இதனால் படைகளை வாபஸ்பெறுவது என்பது இலகுவானதாக இருக்காது.

ஆனால் பலூஜா சம்பவம் அமெரிக்கப்படையினர் மீதும் அமெரிக்காவின் ஆளும் வர்க்கத்தின் மீதும் மக்கள் கொண்டுள்ள அதி உச்சக்கட்ட வெறுப்பைக் காட்டி நிற்கின்றது என்பதை அமெரிக்கா புரிந்துகொள்கின்றதோ இல்லையோ சர்வதேச சமூகம் புரிந்துகொண்டிருக்கும்.

பேரழிவு ஆயுதம் எனும் பெயரில் ஈராக்மீது தொடரப்பட்ட தாக்குதல் ஒருவருடம் பூர்த்தியாகியும் கூட முடிந்தபாடில்லை. 1991முதல் அமெ ரிக்காவின் கொடூரமான தாக்குதலுக்கு ஈராக் தன்னை இரையாகக் கொடுத்துத்தான் வருகின்றது.

அன்று தொட்டு இன்றுவரை ஈராக்கில் வயோதிபர், பெண்கள், குழந்தைகள் உட்பட 30 இலட்சம் பேர் தீவிரவாதம், பயங்கரவாதம், பேரழிவு ஆயுதம் என்றால் என்ன என்றே தெரியாமல் மாண்டு போயுள்ளார்கள்.

உலகை நொடியில் அழிக்கவல்ல பேரழிவு ஆயுதங்களின் மேல் இருக்கும் அமெரிக்கா, ஈராக்கிடம் பேரழிவு ஆயுதம் தடைசெய்யப் பட வேண்டும் என்று போர் தொடுத்தது நியாயமாகுமா... என்று யார் அமெரிக்காவிடம் கேள்வி கேட்கமுடியும்...?

ஈராக் நிலை சுமுகமாகி இருந்தால் எப்போதோ அமெரிக்காவின் பார்வை வட கொரியா, ஈரான் போன்ற நாடுகள் மீது திரும்பியிருக்கும்.

ஏனெனில் அமெரிக்காவின் பொருளாதாரம் பிறநாடுகளின் செல்வங்களை தீவிரவாதம், பயங்கரவாதம், பேரழிவு ஆயுதம் எனும் பெயரில் கொள்ளையிடுவதன் மூலமே வளர்க்கப்படுவதாக அரசியல் ஆய்வாளர்கள் கோடிட்டுக்காட்டியுள்ளனர்.

ஆனால் ஈராக் விடயம் அமெரிக்காவுக்கு பலத்த சிக்கலை உருவாக்கிவிட்டது. ஈராக்கை சின்னாபின்னமாக்கியதும் அமெரிக்காதான். புனரமைப்புச் செய்வதும்

அ. கலைவாணி

அமெரிக்கா கட்டுமானப் பணியாளர்கள்தான்.

இதன் மூலம் போர் தொடுப்பதற்கான செலவை ஈடுகட்ட முடியும். அத்துடன் எண்ணெய் வளமும் பெரும் பகுதி போர்ச் செலவை குறைக்கும் என்பது அமெரிக்க சனாதிபதி புஷ்ஷின் கணக்கு.

ஆனால் புஷ்ஷின் கணக்கு தப்புக் கணக்காகிவிட்டது. ஈராக் போர் வித்தியாசமாக அமெரிக்காவுக்கு தகுந்த பாடம் புகட்டி கொண்டிருக்கின்றது என்றும் நம்பலாம்.

இதேவேளை ஐ.நா.சபையோ நடப்பதை பார்த்துக் கொண்டிருக்கின்றது. ஐ.நா.சபை ஈராக்கில் பிறநாட்டுப் படையினருக்கு அனுமதியளிக்க வேண்டும் எனும் அமெரிக்காவின் கோரிக்கைக்கு செயலர் கொபி அனான் செவிசாய்ப்பதாகத் தெரியவில்லை.

ஆனால், அப்பாவி ஈராக் மக்கள் கொல்லப்படுவதற்கு கொபிஅனான் மிகுந்த கவலை கொண்டுள்ளார்.

ஒன்றுமட்டும் உண்மை. ஐ.நா.சபையின் ஒப்புதலை பெறாது சர்வதேச சட்டங்களெல்லாம் எனக்கல்ல என்று எல்லாவற்றையும் துச்சமென மிதித்து ஈராக் மீது போர் தொடுத்த அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் புஷ் தற்போது அதற்கான பலாபலன்களை அனுபவித்துக்கொண்டிருக்கிறார் என்றால் அது மிகையில்லை.

★★★

# தமிழரசுடன் இணைந்து ஹெ.உறுமய வாக்களித்தது ஈழத்தை ஏற்றுக் கொண்டதற்கு ஒப்பானதாகும்

## சிறி.சு.கட்சியின் பொதுச் செயலாளர் சாடல்

(கொழும்பு)

**சபாநாயகர் தெரிவின்போது தமிழரசுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுடன் இணைந்து ஜாதிக ஹெல உறுமயவினர் வாக்களித்தமையானது அவர்கள் ஈழத்தை ஏற்றுக் கொண்டமைக்குச் சமனானதாகும் என சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரி பால சிறிசேன கூறியுள்ளார்.**

ஜாதிக ஹெல உறுமய ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தை தர்மசங்கட நிலைக்கு இட்டுச் செல்லமாட்டோம் என முன்னர் கூறியிருந்தது. ஆனால், சபாநாயகர் தெரிவில் அக்கட்சியினர் நடந்து கொண்ட விதமானது முன்னர் கூறியமைக்கு எதிரான நிலைப்பாடாகும் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் சுசில் பிரேம் ஜெயந்த கூறியுள்ளார்

அவர் மேலும் கூறுகையில்,

மக்களின் விருப்பத்தின் பேரில் தெரிவான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வெற்றியை மறைப்பதற்காகவே ஐக்கிய தேசியக் கட்சி சபாநாயகர் பதவிக்கு போட்டியிட்டது.

50வீத மக்கள் ஆணையை பெற்ற தமது அரசாங்கத்தின் முக்கிய குறிக்கோளில் நிறைவேற்று அதிகாரம்கொண்ட சனாதிபதி முறையை ஒழிப்பது மற்றும் தேர்தல் முறையை மாற்றுவது என்பதும் அடங்கும்.

அவை இரண்டையும் ஐக்கிய தேசியக் கட்சி ஏற்றுக்கொள்ளவில்லை. ஜாதிக ஹெல உறுமய ஐக்கிய தேசிய கட்சியின் சபாநாயகர் வேட்பாளர் வெற்றி பெறும் நோக்கிலேயே வாக்கெடுப்பில் இருந்து விலகி நின்றது. எனினும் இரண்டு பிக்குமார் சுயாதீனமாக வாக்களித்தனர். பின்னர் மீண்டும் அந்த கட்சி ஐக்கிய தேசியகட்சிக்கு வாக்களித்தமையானது முன்னர் அந்தக் கட்சி அரசாங்கத்தை தர்ம சங்கடநிலைக்கு இட்டுச் செல்ல மாட்டோம் என கூறியமைக்கு எதிரான நிலைப்பாடாகும் என அவர் தெரிவித்தார். (32)

## குடிநீர் விநியோகம்

நாயாற்றுப்பகுதி மக்களுக்கு குடிநீர் விநியோகம் மேற்கொள்ளப்பெற்று வருகிறது.

கரைதுறைப்பற்றுப்பிரதேச சபையின் நீர்க்கொள்கலன் வாகனத்தில் தமிழீழ நிர்வாக சேவையின் ஏற்பாட்டில் இவ்விநியோகம் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. (2[illegible]

# மகாவலி அமைச்சு தொடர்பாக இவ்வாரம் மீண்டும் பேச்சுக்கள்

(கொழும்பு)

மகாவலித்துறை அமைச்சை வழங்குவது தொடர்பில் இந்த வாரம் மீண்டும் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படும் என ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மகாவலி அமைச்சை சனாதிபதி தம் வசம் எடுத்துக்கொண்டு தமக்கு பிரதி அமைச்சுப் பதவியை வழங்குமாறு மக்கள் விடுதலை முன்னணி கோரிய நிலையில் அதற்கு எது வித ஆக்கபூர்வமான பதிலையும் சனாதிபதி வழங்காத நிலையில் இப் பேச்சுவார்த்தை முக்கியத்துவம் பெறுகின்றது.

இதேவேளை நேற்று முன்தினம் ஆற்று படுகை அமைச்சு பொறுப்போற்றுக்கொண்ட மைத்திரிபால சிறிசேன மகாவலிப் பிரச்சினை உடனடியாக தீர்க்கப்படுவதுடன் தங்களுக்கிடையிலான பிணக்குகள் உடனடியாக தீர்க்கப்படும் எனத் தெரிவித்துள்ளார். மகாவலி அமைச்சு தராதுவிடின் ஏனைய அமைச்சு பொறுப்புக்களையும் ஏற்கமாட்டோம் என ஜே.வி.பி. தெரிவித்து வருவது குறிப்பிடத்தக்கது. (32)

## செஞ்சிலுவை அலகுக்கிளைகளுக்கான தெரிவுப் பொதுக்கூட்டம் இன்று

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க கரைச்சிப் பிரதேச செயலர் பிரிவு, அலகுக்கிளைகளுக்கான தெரிவுப் பொதுக்கூட்டம் இன்று நடைபெறவுள்ளது. கிளிநகர கிளைத்தெரிவு காலை 10.00மணிக்கு இலங்கைச் செஞ்சிலுவைச்சங்க மண்டத்திலும், திருநகர் அலகுக்கிளைக்கான தெரிவு பிற்பகல் 2மணிக்கு திருநகர் கிராம அபிவிருத்திச்சங்க மண்டபத்திலும் உதயநகர் அம்பாள் குளம், ஆனந்தநகர் அலகுக்கான தெரிவு மாலை மூன்றுமணிக்கு கிளிநொச்சி மத்திய கல்லூரியிலும் வட்டக்கச்சி அலகுக்கான தெரிவு மாலை 4மணிக்கு இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலையிலும் ஆனைவிழுந் தான் அலகுக்கான தெரிவு காலை 10.00 மணிக்கு ஆனைவிழுந்தான் அதகபாடசாலையிலும் ஸ்கந்தபுரம் கோணாவில் அக்கராயன் அலகுக்கான தெரிவு மாலை இரண்டு மணிக்கு ஸ்கந்தபுரம் முதலாம் பாடசாலையிலும் இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

# இ.த.அ.சபையை புலிகளிடம் ஒப்படைக்குக! சமாதான பேச்சை உடன் ஆரம்பிக்குக!

## "மே" தின கோரிக்கையாக முன்வைக்க முடிவு

தமிழீழ விடுதலைப்புலிகளிடம் இடைக்கால தன்னாட்சி அதிகாரத்தை உடன் ஒப்படைக்க வேண்டும் தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்களை உடன் ஆரம்பிக்கவேண்டும் என்பன "மே" தினத்தில் சிங்கள அரசிடம் முன்வைக்கும் கோரிக்கையாக அமையவேண்டும் என அகில இலங்கை பொதுச் சேவைகள் ஊழியர் சங்கம் கூட்டிய "மே" தின ஆயத்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் கல்முனையில் இக்கூட்டம் நடைபெற்றது.

சங்கத்தின் தலைவர் விஜயரட்ணம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அம்பாறை மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் பத்மநாதன் உட்பட பலர் கலந்து கொண்டனர்

# திருவையாறில் மூலிகைப்பண்ணை விரைவில் கண்காட்சிக்கும் ஏற்பாடு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி திருவையாறு 1ஆம் பகுதியில் சித்த ஆயுர்வேத மூலிகைப்பண்ணை ஒன்று அமைக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

சென்ற வருட இறுதிப்பகுதியில் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் திட்டமிடலில் யுனிசெவ் நிறுவனத்தின் அனுசரணையில் 7லட்சம் ரூபா செலவில் இம்மூலிகைப் பண்ணை அமைக்கப்பட்டுள்ளது. இங்கு மூலிகைக்கண்காட்சியையும் சித்த ஆயுர்வேத மருந்து விநியோகத்தையும் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதுடன் இத்துறை சார்ந்த விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்துவதே இதன் நோக்கமாகும் என இதன் இயக்குனர் லோறன்ஸ் திலகர் தெரிவித்துள்ளார்.

இம்மூலிகைப்பண்ணைக்கு உரிய ஆலோசனைகளை சித்த ஆயுர்வேத மருத்துவ சேவைகள் இணையம் வழங்கி வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (15)

## 27ல் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

கிளி. வலயக்கல்விப் பணிமனையின் முறைசாராக்கல்விப்பிரிவு யுனிசெவ் நிறுவனத்தினரின் அனுசரணையுடன் நடாத்தும் கணினிப் பயிற்சி நெறி தொழித்திறன் பயிற்சி நெறிகளைப் பூர்த்தி செய்தவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவம் வரும் 27 ஆம் திகதியன்று கனகபுரம் மகாவித்தியாலயத்தில் பி.ப. 2.00 மணிக்கு நடைபெறவுள்ளது. (சோ)

# ஒன்பது அருட்சகோதரர்கள் குருக்களாக திருநிலைப்படுத்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மறை மாவட்டத்தில் இவ்வாண்டுக்கான குருத்துவ திருநிலைப்படுத்தும் சடங்கில் 9 அருட்சகோதரர்கள் குருக்களாக நியமனம் செய்யப்படுகின்றார்கள்.

எதிர்வரும் 29ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். மரியன்னை பேராலயத்தில் அதி. வண. யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையால் 7 அருட் சகோதரர்கள் திருநிலைப்படுத்தப்படுவர். இருவர் மன்னார் ஆயர் அதி.வண. மேதகு இராயப்பு யோசெப் ஆண்டகையால் கடந்த 14ஆம் திகதி திருநிலைப்படுத்தப்பட்டனர்.

புனித சவேரியார் குருத்துவக் கல்லூரி மாணவர்களான தி. நிகால் ஜிம்பிறவுண் (புதுக்குடியிருப்பு), அ.பி. திருமகன் (பருத்தித்துறை), தே. செல்வரட்ணம் (குடத்தனை), யே. அன்ரன் அருள்தாஸன் (கொழும்புத்துறை), பெற்றூஸ் தயாபரன் (மண்டைதீவு) ஆகியோரும், அமல மரித்தியாகிகள் சபையைச் சேர்ந்த றஞ்சித் ரூஸ்வோல்ட் (முருங்கன்), கொட்விறி ஜோயல் (புலோலி), யூட் பேணாட் (அலம்பில்) ஆகியோரும்

திருவுளச் சபையைச் சேர்ந்த அன்ரனி யோசப் (வெற்றிலைக்கேணி) என்பவரும் புதிய குருக்களாக குரு நிலைப்படுத்தப்படுகின்றார்கள்.

# செஞ்சிலுவை சர்வதேச குழுவுடன் தொடர்புகொள்ளக் கோரிக்கை

கீழ் குறிப்பிடப்பட்ட நபர்கள் தங்களுக்கு அருகிலுள்ள செஞ்சிலுவை சர்வதேசக்குழு (ஐ.சி.ஆர்.சி) அலுவலகங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு அதன் மல்லாவி அலுவலகம் மிகவும் தாழ்மையுடன் வேண்டிக் கொள்கின்றது. செஞ்சிலுவை சர்வதேசக்குழு அலுவலகங்கள் வவுனியா, மன்னார், மடு, மல்லாவி, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் அமைந்துள்ளன.

இவ்விலாசதாரர்களைப் பற்றியோ அவர்களின் இருப்பிடங்கள் பற்றியோ இச்செய்தியினை வாசிக்கும் எவராவது அறிந்திருப்பின் தயவு செய்து அவைபற்றி அருகில் உள்ள செஞ்சிலுவை சர்வதேசக்குழு அலுவலகங்களுக்குத் தெரியப்படுத்தவும்.

தங்கள் ஒத்துழைப்பிற்கு நன்றிகள்.

1.சுந்தரமூர்த்தி சிறீன்சுந்தரானா 7ஆம் வட்டாரம், சிவநகர் குடியிருப்புத்திட்டம். புதுக்குடியிருப்பு.

2.திருமதி அலெக்சாண்டர் செல்வராணி இல. 22.4, 5ஆம் யுனிற் தருமபுரம்.

3.அட்டக்குட்டி கதிரிப்பிள்ளை நாகராசா இலங்கை மின்சார சபை நிலையம் அருகில் கிளிநொச்சி

4.ராசநாயகம் பிலோமினா புஷ்பம் விஜயராஜ் அகதிகள் முகாம் 7ஆம் வட்டாரம் புதுக்குடியிருப்பு.

5.ரோகினியம்மா 396, இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் கிளிநொச்சி.

6.திருமதி புலேந்திரன் மஞ்சுளா தேவி கோணாவில் முகாம், கோணாவில்.

7.கணபதிப்பிள்ளை மகேசன் இல.49, 5ஆம் பண்ணை கனகபுரம், கிளிநொச்சி

8.திருமதி ஏஞ்சலின் சுசிரேகா மேட்டா ரகுநாதன் விசுவமடு மேற்கு, விசுவமடு.

9.திருமதி சதீஸ்குமார் ஈஸ்வரிதேவி புனித அந்தோனியார் ஆலய அருகில் மாத்தளன், புதுக்குடியிருப்பு.

10.திருமதி சதீஸ்குமார் நிவேதினி காந்திக்கிராமம் கோணாவில் கிளிநொச்சி.

11.அற்புதம் சிறிநந்தினி மேட்டா உதயகுமாரன் 4ஆம் வட்டாரம், கோம்பாவில் புதுக்குடியிருப்பு.

12.பத்மநாதன் சிருபாம்பாள் விலங்கியற்பிரிவு விவசாயபீடம் கிளிநொச்சி.

13.ஆன் யூலியற் நிசாந்தினி மேட்டா, புனிதம், புனித திரேசம்மா ஆலயம் கிளிநொச்சி.

14.சிதம்பரப்பிள்ளை சரோஜா பிள்ளையார் கோவிலடி கிளிநொச்சி.

15.அருணாசலம் பெருமாள் இல.24 யூனியன் குளம் கோணாவில், கிளிநொச்சி.

16.குணராசா அன்னலட்சுமி அம்பலப்பெருமாள் சந்தி அக்கராயன், கிளிநொச்சி.

17.மல்லிகாதேவி புனித அந்தோனியார் ஆலய அருகில் கண்ணகிபுரம் ஸ்கந்தபுரம்.

18.நடராசா சிந்தாமணி கிருபாகரன் குடியிருப்பு ஆனைவிழுந்தான் அக்கராயன்

19.தங்கையா பரமேஸ்வரி பேக்கரி வீதி ஊற்றுப்புலம் கிளிநொச்சி.

20.சந்திரா சிவன் கோவில் அருகில் சிவநகர் உருத்திரபுரம் கிளிநொச்சி.

21.ரவி ராஜேஸ்வரி இல. 202/4 பாடசாலை அருகில் தருமபுரம்

22.கணேசன் சிவகலா 8ஆம் கட்டை ஆரோக்கியபுரம் அக்கராயன்

23.ஆனந்தராசா ஆனந்தபவானி புனித அந்தோனியார் ஆலய அருகில் தேவிப்பாபுலவு புதுக்குடியிருப்பு.

24.பவானந்தன் தேவி பிள்ளையார் கோவிலடி கொருடமடு ஒட்டுசுட்டான்.

25.மரியதாஸ் அன்னலட்சுமி மாணிக்கபுரம் ரெட்பானா விசுவமடு.

# 3ஆம் ஆண்டு நினைவு நாள்

பிறப்பு 12 08 1981

வீரச்சாவு 25 04 2001



## 2ஆம் லெப்.கலைமதி

*சின்னத்தம்பி ஜெயச்சந்திரவதனி*

தானைத்தலைவனின் தடம் பதித்து
தமிழீழம் மீட்கும் புனிதப் போரில்
தோளோடு கணை செலுத்தியதனை
அணைத்து எதிரிப்படை மூட்டிய
தீச்சுவாலைதனை அணைத்து உலகம்
வியக்கும் புனித விடுதலைப் பணிக்கு
தனைக்கொடுத்த உன்பணி முடிக்க
தடம் பதிப்போம்.

இவருடன் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட அனைத்து மாவீரர்களையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

25.04.2004 அன்று இவரது இல்லத்தில் நடைபெறும் நினைவு நாளிலும், மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார் உறவினர்கள், நண்பர்கள், சகபோராளிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

த.முகவரி:-
பிரதான வீதி,
வள்ளிபுனம்,
புதுக்குடியிருப்பு,
நி.முகவரி-யாழ்ப்பாணம்.

தகவல்:
சகோதரன்,
சி.கலைவாணன் (போராளி),
அரசியல்துறை.

(4462)

# மூன்றாம் ஆண்டு நினைவலை

தாயின் மடியில் 30 06 1978

தாயக மண்ணில் 25 04 2001



## கப்டன் பூங்குழலி

*மாயவன் புவனறதி*

(சோதியா படையணி கள மருத்துவப் பிரிவு)

*பூவுலகு போற்றிடவே புவனறதி ஆனாயம்மா*
*காலத்தின் தேவையினால்*
*கரிகாலன் படை சேர்ந்தாய்*
*புவனறதி எனும் நாமம் பூங்குழலி ஆகியதே*
*மருத்துவ புலியாக புயலாக சேவை செய்தாய்*
*மகத்தான உன்சேவை*
*நிலை இழந்து போனதம்மா*
*அக்கினிச்சுவாலை உன்னை அள்ளிச் சென்றதுவோ*
*மூன்றாண்டு சென்றாலும்*
*முன்னூறாண்டு சென்றாலும்*
*ஆறாதம்மா உன்துயரம்*
*அழியாதம்மா உன் நினைவு*

உன் பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, அக்கா,
தங்கைமார், தம்பிமார், அத்தான்,
பெறாமக்கள், உற்றார்,
உறவினர், நண்பர்கள்.

25.04.2001 அன்று இவருடன் வீரச்சாவடைந்த அனைத்து போராளிகளையும் நினைவு கூருகிறோம்.

தகவல்:
வ. மாயவன்,
இல38/1 வலதுகரை,
முத்துஐயன்கட்டு, ஒட்டுசுட்டான்.

(4461)

- உடையார்கட்டு இருட்டுமடுவில் -

# ஈவிரக்கமற்றமுறையில் குழந்தையை கிணற்றில் போட்டு படுகொலை

(உடையார்கட்டு)

உடையார்கட்டு இருட்டு மடுவில் இரவு வேளை நபர் ஒருவரின் ஈவிரக்கமற்ற செயலால் மூன்று மாத பச்சிளம் குழந்தை பரிதாபமாக மரணமடைந்துள்ளது.

இருட்டு மடுப் பகுதியில் ஆண் துணையின்றி வசித்து வந்த பெண்ணும் அவரது குழந்தையும் தூங்கிய வேளை இனந் தெரியாத நபரால் இரவு குழந்தை கிணற்றில் தூக்கிப் போடப்பட்டதில் பரிதாபகரமாக மரணம் அடைந்துள்ளது.

கடந்த 18ஆம் திகதி 10.30 மணிக்கு இடம் பெற்ற இச்சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் உடையார்கட்டு காவல் பணிமனையினரால் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாக காவல்பணிமனையினர்மேலும் தெரிவித்துள்ளனர்.(19)

# போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனர்வாழ்வுத்திட்டம் (CA ARP)

## ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது

### கடன் இலக்கம்–2043–ஸ்ரீ (எஸ்.எவ்)

மன்னார் மாவட்டத்தில் சமூக மீளமைப்பு உபதிட்டத்தை அமுல்ப் படுத்துவதற்கு பங்குதாரராவதற்கான அரசசார்பற்ற நிறுவனங்களின் (என்.ஜி.ஓ) விருப்பு வெளிப்பாடு பற்றி அழைப்பு.

போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனர்வாழ்வுத் திட்டத்தின் ஆகுசெலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளது. வடகிழக்கின் போரினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் பிரதானமாக யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை மீளமைப்பதற்கும் அத்தியாவசிய உட்கட்டமைப்பு வேலைகளுக்கும் உதவிகளை நல்குவதுமே இத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும். இத்திட்டம் வடகிழக்கு மாகாணத்திலுள்ள எட்டு மாவட்டங்களில் செயற்படுவதோடு விடுவிக்கப்பட்ட, விடுவிக்கப்படாத பகுதிகளையும் உள்ளடக்கியதாகும்.

இத்திட்டம் அரசாங்கத் திணைக்களங்களின் உதவியுடன் (அரச திணைக்களங்கள், திட்டவெளிக்கள உத்தியோகத்தர்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள்) உள்ளூர் சமுதாய அமைப்புக்களினாலும், உள்ளூர் சமூகங்களினாலும் அமுல்ப்படுத்தப்படும். இந்த சமூக அபிவிருத்தி உபதிட்டங்கள் சமூகத்தை மையமாகக் கொண்ட சமூகத்தவர்களின் பூரண பங்களிப்போடு செயற்படுத்தப்படும். இத்திட்டத்தில் பயன்பெறும் சமூகத்தினர் இத்திட்டத்தை திட்டமிடுவதிலும், அமுல்நடத்துவதிலும் இத்திட்டத்தின் அன்றாட அபிவிருத்தி வேலைகளை கண்காணிப்பதிலும் முற்றாக பங்களிப்புச் செய்வதை உறுதிப்படுத்த வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் இத்திட்டத்தை அமுல் நடத்துவதற்காக சில கிராமங்கள் ஆரம்பத்தில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் வெற்றிகரமான செயற்பாடுகளைப் பொறுத்து மேலும் பலகிராமங்கள் இத்திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படும்.

ஆரம்பகட்டமாகப் பின்வரும் கிராமங்களில் இனம்காணப்பட்ட சமூகத்தினரிடையே சமூக அபிவிருத்தித் திட்டங்களை செயற்படுத்துவதற்கும், சமூகத்தை அபிவிருத்திக்கு தயார் படுத்துவதற்கும் வழங்களை ஒன்றுபடுத்துவதற்கும் நிறுவன ரீதியான அபிவிருத்தியை உருவாக்குவதற்கும் ஏற்கனவே வடக்கு கிழக்கில் திட்டங்களைச் செயற்படுத்தும் தகுதி வாய்ந்த அரச சார்பற்ற நிறுவனங்களிடமிருந்து விருப்பத்தை வெளிப்படுத்துமாறு அழைப்பு விடுக்கப்படுகின்றது.

| மாவட்டம் | கிராமங்கள் | பிரதேசசெயலாளர்/ உதவிஅரசாங்க அதிபர் பிரிவு |
|---|---|---|
| மன்னார் | 01. பெரியகமம் | மன்னார் |
| | 02. இராசமடு | நானாட்டான் |
| | 03. கொக்குப்புடையான் | முசலி |
| | 04. சின்னப்பண்டிவிரிச்சான் | மடு |
| | 05. இலுப்பைக்கடவை | மாந்தை மேற்கு |

ஆர்வமுடைய அரசசார்பற்ற நிறுவனம் இதுபற்றிய மேலதிக விபரங்களை வேலைநாட்களில் காலை 9.00மணி தொடக்கம் மாலை 3.30மணிவரை மாவட்ட செயலர்/அரசாங்க அதிபரிடமிருந்து (மன்னார் மாவட்டம் தொலைபேசி-023/2233103, தொலைநகரி-023/2233103, மின்அஞ்சல் distmnr @ sltnet.lk) பெற்றுக்கொள்ளலாம்.

இத்திட்டத்தை அமுல்நடத்த விரும்பும் தகுதி வாய்ந்தஅரசார்பற்ற நிறுவனம் தங்களுடைய விருப்பத்தெரிவை மாவட்ட செயலருக்கு/அரசாங்கஅதிபருக்கு 06.05.2004 மாலை 3.00மணிக்கு முன்பதாகத் தெரிவிக்க வேண்டும்.


விருப்பத் தெரிவை அறிவிக்கும் பொழுது பின்வரும் விபரங்களைஅது உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

01. விண்ணப்பிக்கும் நிறுவனம் பற்றிய விபரங்கள் நிறுவனத்தின் நோக்கம், முகவரி, தொலைபேசி இலக்கம் சட்டரீதியான பதிவுசெய்த விபரங்கள், ஆளணிகள் நிறுவன ஒழுங்கமைப்பு, கிளைக்காரியாலயம் முதலியன.
02. தொழில்சார் அனுபவமுடைய நிபுணர்களின் எண்ணிக்கையையும், நிபுணத்துவம் பெற்ற துறையையும்.
03. வடகிழக்கு மாகாணத்தில் புனரமைப்பு, சமூகமீள்அமைப்பு வேலைகளில் உள்ள அனுபவம்.
04. விசேடமாக வடகிழக்கில் சமூகஒருங்கிணைத்தல், சமூக பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகள், சிறுகுழுக்களை உருவாக்குதல், சிறியகடன் நடவடிக்கைகளை உருவாக்கல்ஆகியவற்றில் உள்ள அனுபவம்.
05. வடகிழக்கில் தற்போது தாங்கள் நடைமுறைப்படுத்தப்படும் வேலைத்தொகையையும் கடந்த 5 வருடங்களாக நடைமுறைப்படுத்திய வேலைத்திட்டங்களின் விபரங்களையும்.
06. இக்குறிப்பிட்ட துறையில் சாதித்த குறிப்பிடத்தக்க சாதனைகள்.
07. அத்திட்டத்திற்கான அரச சார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்பு.
08. விருப்புத் தெரிவிற்கான வேறு ஏதாவது தகவல்கள்.

எல்லா ஆவணங்களும் விண்ணப்பமும் முதற்தரப்பாக பேணிப்பாதுகாக்கப்படும் என்பதையும், அவைகள் திருப்பி அனுப்பப்படமாட்டாது என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**வே.விசுவலிங்கம்,**
**மாவட்டசெயலாளர்/**
**அரசாங்கஅதிபர்,**
**மன்னார்.**

(சி-9383)



## சிந்தனைக்கு

நாங்கள் ஒரு உன்னத இலட்சியத் திற்காகப் போராடிவருகின்றோம். அந்த இலட்சியத்திற்காக உழைப்பதும் வாழ்வதும் எங்களுக்குப் பூரண ஆத்ம நிறைவைத் தருகின்றது.

தமிழீழத்தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ். சாலை, கிளிநொச்சி. 25-04-2004


## திடீர் அழைப்பு ஏன்?

விடுதலைப்புலிகளுக்கும் - சிறிலங்கா அரசிற்கும் இடையில் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு மூன்றாம் தரப்பாக - ஏற்பாட்டாளராகச் செயற்படுமாறு நோர்வே அரசை சனாதிபதி சந்திரிகா அழைத்துள்ளார். இவ் அழைப்பு சனாதிபதி சந்திரிகா வினால் நோர்வே பிரதமரிடம் நேரடியாகவே தொலைபேசி மூலம் விடுக்கப்பட்டது.

சனாதிபதி சந்திரிகா ஐ.ம.சு. முன்னணி அரசாங்கம் அமைக்கப்பட்டதும் விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என ஏற்கனவே குறிப்பிட்டிருந்தவர்தான். ஆகையினால், விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கான அறிவிப்பை அவர் வெளியிடுவது என்பது ஆச்சரியத்திற்குரிய விடயமல்ல.

ஆனால், நோர்வே அரசை அவர் மீண்டும் ஏற்பாட்டாளராக அழைத்துள்ளமையும், சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பான அறிவிப்பை அவர் வெளியிட்டுள்ள காலப்பகுதியுமே முக்கியத்துவம் மிக்கதாகவும், சில கேள்விகளை எழ வைப்பதாகவும் உள்ளது. ஏனெனில், விடுதலைப்புலிகளுடன் ஓர் உறுதியான நிலையில் இருந்து பேச்சுவார்த்தைகளை நடத்தக் கூடிய நிலையில் அரசாங்கம் உள்ளதா என்பதே இக்கேள்விகளுக்குக் காரணமாகும்.

சனாதிபதி சந்திரிகா விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்படும் என ஏற்கனவே கூறியிருப்பினும், சபாநாயகருக்கான போட்டியில் தோல்வி அடைந்த கையுடன் சனாதிபதி நோர்வே அரசை அழைத்துள்ளமையானது, பேச்சுவார்த்தைகளுக்கு அப்பால், வேறு அரசியல் நோக்கம் எதையும் கொண்டுள்ளதா? எனச் சந்தேகிக்க வைக்கின்றது.

அதாவது, விடுதலைப்புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படும் பட்சத்தில் தமிழர் தேசியக் கூட்டமைப்பு, ஆளும் கட்சிக்கு எதிரான வாக்களிப்புக்களில் கலந்து கொள்வதைத் தவிர்த்துக் கொள்ளும் நோக்கம் கொண்டதா என்ற கேள்வியை எழ வைப்பதாகவுள்ளது. சபாநாயகருக்கான வாக்கெடுப்பில் ஐ.தே. மு. வெற்றி பெற்றமைக்கு 21 தமிழர் தேசியக் கூட்டமைப்பினர் ஐ. தே.கட்சிக்கு ஆதரவாக வாக்களித்தமையே காரணமாகும்.

இத்தகைய காரணம் ஒன்றை சனாதிபதி சந்திரிகாவோ அன்றி அவரது சகாக்களோ மறுப்பதாக இருப்பினும்கூட உடனடியாக நோர்வேயை அழைத்துள்ளமையின் பின்னணியில் வலுவான காரணம் இல்லாமல் இருக்க வாய்ப்பில்லை. ஏனெனில், அண்மைய சனாதிபதி சந்திரிகாவின் நிலைப்பாடும், ஜே.வி.பி.யின் நிலைப்பாடும் நோர்வேயை உடன் அழைப்பதற்கான சூழ்நிலையைக் கொண்டவையாக இருக்கவில்லை.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் ஜே.வி.பி.யும் இனப்பிரச்சினைத் தீர்விற்கான முயற்சியில் மூன்றாம் தரப்பாக இந்தியாவையே ஈடுபடுத்த விருப்பம் கொண்டிருந்தன. இதற்கான அறிவிப்புக்களை அவர்கள் வெளிப்படையாக விடவும் தயங்கவில்லை. பிரதமராகப் பதவி ஏற்றதும் மகிந்த ராஜபக்ஷ, தனது முதலாவது பத்திரிகையாளர் சந்திப்பிலேயே இந்தியா இவ்விடயத்தில் நேரடியாகத் தலையீடு செய்ய வேண்டும் எனக் கோரிக்கை விடுத்திருந்தார்.

சனாதிபதி சந்திரிகாவின் நெருங்கிய சாகவும், ஆலோசகருமான லக்ஷ்மன் கதிர்காமரும் இந்தியாவுடன் நெருக்கமான உறவைக் கொண்டிருந்தார். இந்தியாவை தலையிடுமாறு ஒன்றிற்கு மேற்பட்ட தடவைகள் அவர் கோரிக்கையும் விடுத்திருந்தார்.

ஜே.வி.பி.யும் இத்தகையதொரு நிலைப்பாட்டையே பொதுவில் வெளிப்படுத்தியிருந்தது. அதாவது, இன்றைய ஆளும் தரப்பு ஒருமித்த நிலையில் இந்தியாவை தலையீடு செய்ய வைப்பதிலேயே அக்கறை கொண்டிருந்தது. இந்திய தரப்புக்கூட இனப்பிரச்சினை விவகாரம் குறித்து வெளிப்படையாக எதையுமே கூறாதுவிடினும் ஐ.ம.சு. முன்னணி ஆட்சி அமைப்பதற்கு தன்னாலான ஒத்துழைப்பை வழங்கத் தயாராகவே இருந்தது.

இது மட்டுமல்ல, சனாதிபதி சந்திரிகா தலைமையிலான சுதந்திரக் கட்சியும் சரி, ஜே.வி.பி.யும் சரி நோர்வே அரசிற்கு எதிராகத் தமது நிலைப்பாட்டை வெளிப்படையாகவே தெரிவித்தும் இருந்தன. நோர்வேயைக் கடுமையாகச் சாடிய இவ்விரு தரப்பினரும் நோர்வே விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாகச் செயற்படுவதாகவும் குற்றம் சாட்டினர். அத்தோடு, தமது ஆட்சேபத்தையும் வெளிப்படுத்தும் முகமாக நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் கெல்கேசனுடனான சந்திப்பிற்கு நேரம் ஒதுக்கீடு செய்த பின்னர் கூடச் சந்திப்பை ரத்துச் செய்திருந்தனர். ஜே.வி.பி.யோ நோர்வேயின் தேசியக் கொடியை எரித்ததோடு, நோர்வேயின் அழைப்பை ஏற்றுத் தனது பாராளுமன்ற உறுப்பினர்களை நோர்வே அனுப்பாதும் இருந்தது.

இந்த நிலையில், நோர்வேயை மீண்டும் ஏற்பாட்டாளராகச் செயற்பட சனாதிபதி சந்திரிகா அழைத்தமையானது, சனாதிபதி சந்திரிகா அரசாங்கம் சந்தித்துவரும் பாரிய நெருக்கடியில் இருந்து தம்மை விடுவித்துக் கொள்ளச் சமாதான முயற்சிகளைப் பயன்படுத்த முற்பட்டுள்ளாரோ என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. ஆனால், விடுதலைப்புலிகள் எந்த அரசாங்கத்துடனும் இனப்பிரச்சினை தொடர்பில் பேசத் தயாராக இருப்பதாக ஏற்கனவே அறிவித்திருப்பினும், பலவீனமான உறுதியான கொள்கையற்ற - அதாவது, சிறுபான்மை அரசாங்கமாகவும், இனப்பிரச்சினை தொடர்பாக ஆளும்கட்சிக்குள் இணக்கப்பாடான கொள்கை அற்றதுமான ஒரு அரசாங்கத்துடன் பேசுவது என்பது ஆலோசித்துப் பதில் கூற வேண்டியதொன்றாகவே இருக்கும்.

# பிரதிச் சபாநாயகராக ரவூப் ஹக்கீம் பிரதிக் குழுக்களின் தலைமைக்கு தொண்டமான்

## - பிரேரிக்க ஐ.தே. முன்னணி தீர்மானம்

(கொழும்பு)

பிரதி சபாநாயகர் பதவிக்கு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமையும், பிரதிக் குழுக்களின் தலைமைக்கு ஆறுமுகம் தொண்டமானையும், பிரேரிப்பதற்கு ஐக்கிய தேசிய முன்னணி தீர்மானித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி நடவடிக்கை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு இரண்டாவது அழுத்தத்தைக் கொடுப்பதாக அமைந்துள்ளது.

இதேவேளை, மேற்படி இருவரையும் நியமிப்பதற்கு ஐ.தே. முன்னணி முடிவு செய்துள்ளமையானது இரண்டு கட்சிகளையும் தொடர்ந்து தன்னகத்தே வைத்திருப்பதுடன், அரசாங்கத்துக்கு கூடுதல் அழுத்தத்தைக் கொடுப்பதாகவும் அமைந்துள்ளது.

சிறிலங்காவின் அடுத்த நாடாளுமன்றம் மே மாதம் 18ஆம் திகதி கூடவுள்ளது. (32)

# யாழ். கொள்ளைச்சம்பவங்களுடன் தேசவிரோத கும்பல்களுக்கு தொடர்பு

## - சிறிலங்காப் பொலிசார் சந்தேகம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் அடிக்கடி இடம் பெற்று வரும் கொள்ளைச் சம்பவங்களிற்கும் யாழில் செயற்பட்டு வரும் தேசவிரோதக் கும்பல்களுக்குமிடையே நெருங்கிய தொடர்புகள் இருப்பதாக சிறிலங்காப் பொலிசார் சந்தேகம் தெரிவிக்கின்றனர்.

யாழ். குடாநாட்டில் அண்மைக் காலமாக வழிப்பறிகள், வீடுடைத்துத்திருடல், ஆட்கடத்தல், வாகனக்கடத்தல், கொலை செய்து பணம் பறித்தல் என பல சம்பவங்கள் இனம் தெரியாதோரால் நடத்தப்பட்டுவருகின்றது.

இவ்வாறான சம்பவங்கள் இராணுவ சீருடைகளில் வருவோராலும், ஆயுதங்களுடன் வருவோராலுமே நடத்தப்படுவதாக விசாரணைகள் மூலம் தெரியவந்திருப்பதால் இராணுவத்தினருடைய ஒத்துழைப்புடன் யாழ்.குடாநாட்டில் செயற்பட்டுவரும் தமிழ் தேசவிரோத கும்பல்களுக்கும்-இவ்வாறான சம்பவங்களுக்கும் இடையே தொடர்புகள் இருக்கலாம் என பொலிசார் மேலும் சுட்டிக்காட்டுகின்றனர். (33)

# தீவகத்தில் வதிவிடப்பாஸ் முறையை நீக்குக யாழ். தளபதிக்கு ம.உ.அமைப்பு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.தீவகத்தில் படையினரால் அமுலப்படுத்தப்பட்டுள்ள வதிவிடப் பாஸ் நடைமுறைகளை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு யாழ். மாவட்ட படைத்தளபதி மேஜர்.ஜெனரல் சுசில் சந்திரபால விடம் யாழ்.மாவட்ட மனிதஉரிமைகளை மேம்படுத்துவதற்கும், பாதுகாப்பதற்குமான அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

அண்மைக்காலமாக யாழ். தீவகப்பகுதிகளில் வாழும் மக்களிடையே வதிவிடப்பாஸ் நடைமுறைகளை அமுல்ப்படுத்தி வருகின்றனர். இது மக்களின் அடிப்படை வாழ்வுரிமைகளை மீறுவதாகவும், இயல்பு வாழ்வைப் பாதிப்பதாகவும் அமைகிறது.

இதனால் படையினரது இக்கெடுபிடி நடவடிக்கைகள் நீக்கப்படல் வேண்டும் எனக் கோரியுள்ள இவ்வமைப்பு படைத் தளபதிக்கு இது தொடர்பில் கடிதம் ஒன்றையும் அனுப்பி வைத்துள்ளது. (33)

# குறிகாட்டுவான்-நெடுந்தீவு பயணிகள் படகில் படையினர் பயணிப்பதை கைவிட வேண்டும்

## -பொது அமைப்புக்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

குறிகாட்டுவானுக்கும் - நெடுந்தீவுக்கும் இடையே இடம் பெற்றுவரும் பயணிகள் படகுச் சேவையை படையினர் தமது போக்குவரத்துத்தேவைகளுக்காக பயன்படுத்துவது நிறுத்தப்படல் வேண்டும் என யாழ்.மாவட்ட பொது அமைப்புக்கள் ஒன்றியத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மக்களின் போக்குவரவு தேவைகளைக் கருத்தில் கொண்டு இப் படகுச் சேவை நடத்தப்பட்டு வருகின்றது. இவ்வாறு சேவையில் ஈடுபடுத்தப்படுகின்ற படகுகளில் மட்டுப்படுத்தப்பட்ட பயணிகளே பயணிக்கமுடியும் இதனால் இப்படகுகளில் பயணிக்கும் மக்கள் நெருக்கடிகள் மத்தியிலும் காத்திருப்புக்களுடனுமே பயணிக்கின்றனர்.

எனினும் இப்படகுகளில் மக்களுடன் படையினரும் பொலிசாரும் பயணித்துவருகின்றனர், மக்களுக்கு இடையூறு தரும் விதத்திலும், பயணிகளை அச்சுறுத்தும் விதத்திலும் ஆயுதங்களுடனும், இவ்வாறு பயணிப்பது மக்களது இயல்பான போக்குவரவை பாதிப்பதாக சுட்டிக்காட்டியே படைத் தரப்பினரது இச்செயற்பாடுகள் தவிர்க்கப்படல் வேண்டும் என யாழ் மாவட்ட பொது அமைப்புக்கள் கோரிக்கைவிடுத்துள்ளனர். (33)

# சிறிலங்காவுக்கான போட்டியில் பங்கேற்கப்போவதில்லை

## - அக்தர் தெரிவிப்பு



மலேசியாவில் நடைபெற விருக்கும் சிறிலங்காவுக்கு எதிரான போட்டியில் தான் பங்கேற்கப் போவதில்லை என பாகிஸ்தான் அணியின் பந்து வீச்சாளர் சொகைப் அக்தர் தெரிவித்துள்ளார்.

அண்மையில் இந்தியாவுடனான போட்டிகளில் தனது ஆட்டம் குறித்துப்பல விமர்சனங்கள் எழுந்துள்ளமையால் தான் இந்த முடிவுக்கு வந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவுடனான போட்டிகளில் ஏற்பட்ட தோல்விக்கு தமது பங்களிப்பு மட்டுமன்றி களத்தடுப்பையும் குறைகூறும் அவர் அதனாலேயே தோல்வியைத் தவிர்க்க முடியாமல் போனதாகக் கூறுகிறார்.

இதற்கிடையில் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் அனுமதியின்றி இந்தியாவுக்கு அக்தர் விஜயம் செய்துள்ளமையை சபையின் செய்தியாளர் விமர்சித்துள்ளார்.

## உலகில் சிறந்த வீரர் சச்சின் டெண்டுல்கர்தான்

## - வக்கா யூனிஸ்

உலகில் தற்போதைய தலை சிறந்த வீரர் சச்சின் டெண்டுல்கர் தான் என பாகிஸ்தானின் முன்னாள் தலைவரும் பந்து வீச்சாளருமான வக்கா யூனிஸ் தெரிவித்துள்ளார்.

1989ஆம் ஆண்டில் ஒரே டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் அறிமுகமானதை நினைவுகூரும் அவர் 19 வயதுக்குட்பட்டோருக்கான சர்வதேசப் போட்டிகளில் பங்கேற்கவந்திருந்த ஜடேஜா மொங்கியா சச்சினின் சிறுவயது ஆட்டம் பற்றி கதைத்துக் கொண்டிருந்த போது நம்புவதற்கு கடின மாயிருந்ததாகத் தெரிவித்துள்ளார். பாகிஸ்தானுடன் முல்டானில் அண்மையில் நடைபெற்றபோட்டியில் 194 ஓட்டங்களைப் பெற்ற போதும் அவர் மோசமாக ஆடவில்லை. மிக நிதானமாகவும், சரியாகவும் ஆடினார். ஷேவாக்கின் ஆட்டத்தை இதனுடன் ஒப்பிட முடியாது எனக் கூறியுள்ளார்.



# பேச்சுவார்த்தைக்கு உதவ நோர்வேயை அழைத்தமைக்கு ஐ.தே.க.வரவேற்பு

(கொழும்பு)

சமாதான நடவடிக்கைகளுக்கு நோர்வே அரசின் ஒத்துழைப்பு தொடர்ந்தும் தேவையென்று கூறி சனாதிபதி நோர்வே அரசுக்கு விடுத்துள்ள அழைப்பை ஐக்கிய தேசியக் கட்சி வரவேற்றுள்ளது.

சமாதான நடவடிக்கைகளை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்வதற்கு 2002 ஆம் ஆண்டு ஒஸ்லோ பிரகடனத்தையும் 2003-ஆம் ஆண்டு டோக்கியோ பிரகடனத்தையும் அடிப்படையாக கொண்டு செயற்பட வேண்டும் என்ற தமது கட்சியின் நிலைப்பாடு குறித்து அரசாங்கம் தமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்த வேண்டும் என்றும் ஐக்கியதேசியக் கட்சி தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

சனாதிபதி சமாதான நடவடிக்கைகளில் ஏற்பாட்டளராக செயற்பட முன் வருமாறு நோர்வே பிரதமருக்கு தொலைபேசி மூலம் அழைப்பு விடுத்துள்ளமை தெரிந்ததே. (32)

# ஹெல உறுமயவின் ஆதரவைப் பெற்றுத் தந்த ஜே.வி.பி.யினருக்கு எனது நன்றிகள்

## புதிய சபாநாயகர் லொக்குபண்டார கூறுகிறார்

நாடாளுமன்றத்தில் சபாநாயகர் தெரிவின்போது ஜாதிக ஹெல உறுமயவின் ஆதரவைப் பெற்றுக் கொடுத்தமைக்காக மக்கள் விடுதலை முன்னணியினருக்கு நன்றி தெரிவிப்பதாக சபாநாயகர் டபிள்யூ.ஜே.மூ. லொக்கு பண்டார குறிப்பிட்டுள்ளார். பதவியேற்ற பின் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவுடன் தலதா மாளிகைக்குச் சென்ற புதிய சபாநாயகர் அஸ்கிரிய மற்றும் மல்வத்த மகாநாயக்கர்களைச் சந்தித்தார். 13ஆவது பாராளுமன்றத் துக்கான புதிய சபாநாயகர் தெரிவு பெரும் அமளிதுமளிக்கு மத்தியில் கடந்த 22 ம் திகதி நடைபெற்று புதிய பாராளுமன்ற சபாநாயகராக வி.ஜே.டபிள்யூ. லொக்குபண்டார மேலதிக ஒரு வாக்கைப் பெற்றுத் தெரிவானார் என்பது தெரிந்ததே. (32)

# பொலிசார் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

முறைப்பாடு செய்வதற்காக பொலிஸ் நிலையம் சென்ற குடும்பஸ் தர் ஒருவரைப் பொலிசார் கடுமையாகத் தாக்கித் துன்புறுத்தியுள்ளனர். நேற்று யாழ். ஊர்காவற்துறை பொலிஸ் நிலையத்தில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த மு. சின்னத்தம்பி (வயது-42) என்பவரே தாக்குதலுக்கு இலக்கானவராவர். (33)

# பயணப்பெட்டி மாறியதால் சிறைவாசம் செய்த வர்த்தகர்

(புதுக்குடியிருப்பு)

கையில் எடுத்துச்சென்ற பயணப்பெட்டி மாறியதால் சிறை செல்ல வேண்டிய அவலம் புதுக்குடியிருப்பு வர்த்தகருக்கு அண்மையில் கொழும்பில் ஏற்பட்டுள்ளது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது கடந்த 14ஆம் திகதி அன்று புதுக்குடியிருப்பிலிருந்து கொழும்பு செல்வதற்காக வவுனியாவுக்குச் சென்ற வர்த்தகர் வவுனியாவிலிருந்து சுமார் 9.00 மணியளவில் புத்தளம் ஊடாக கொழும்பு செல்லும் பஸ் வண்டியில் ஏறித் தனது சிறிய சூட்கேசை பஸ்சின் மேல் தட்டில் வைத்துவிட்டு இருந்துள்ளார்.

கொழும்பு பஸ் சென்றதும் அவர் சூட்கேசை எடுத்துக்கொண்டு உடன் பொருட்களைக் கொள்வனவு செய்யும் நோக்குடன் வழமையாகப் பொருட்கள் கொள்வனவு செய்யும் வணிக நிலையத்துக்குச் சென்றுள்ளார்.

அங்கு சூட்கேசில் பொருட்களின் விபரம் அடங்கிய சிட்டையை எடுக்கும் நோக்குடன் சூட்கேசை திறந்த போது அதற்குள் இராணுவச்சீருடை மற்றும் இராணுவத்துடன் சம்பந்தப்பட்ட பொருட்கள் இருந்தன. இதைப்பார்த்து அதிர்ச்சியடைந்த வர்த்தகர் செய்வதறியாது திகைத்தபோது அந்த வாடிக்கை கொழும்பு வணிகர் இவருடன் கதைத்துக்கதைத்து பொலிசாருக்கு உடன்தகவலை அனுப்பியுள்ளார். தகவல் கிடைத்த வேகத்தில் பொலிசார் அந்த இடத்துக்கு வந்து குறித்த வர்த்தகரைக் கைதுசெய்து சென்றனர். பாதிப்புக்குள்ளான வர்த்தகர் தனது நிலையை எடுத்துக்கூறிய போதும் பொலிசார் ஏற்றுக்கொள்ளவில்லை.

இதன்பின்னர் சூட்கேசுக்கு உரித்தான இராணுவவீரர் அழைக்கப்பட்டார் அவர் வந்ததும் பின்னர் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு இதன்பின்னரே புதுக்குடியிருப்பு வர்த்தகர் கடந்த 22ஆம் திகதி அன்று விடுதலையாகி புதுக்குடியிருப்பு வந்து சேர்ந்தார். (08)

# நூல் வெளியீடு

பண்டிதர் ச.வே. பஞ்சாட்சரம் எழுதிய "சின்னப்பாப்பா பாட்டு" நூல் வெளியீட்டு விழா இன்று பி.ப 3.30 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன்கல்லூரியில் கலைச்செல்வி ஆசிரியர் சிற்பி சிவசரணபவன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

# அமைச்சுப் பொறுப்புகள் குறித்த வர்த்தமானி அறிவித்தல் இல்லை

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அரசாங்க அமைச்சுக்களின் பொறுப்புக்கள் தொடர்பாக வர்த்தமானி அறிவித்தல் இன்னமும் வெளியிடப் படவில்லை இதன் காரணமாக அமைச்சர்கள் தமது கடமைகள் சம்பந்தமாக தெளிவான அறிவை இன்னமும் பெற்றுக் கொள்ளவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று அமைச்சர்களின் பொறுப்புகள் தொடர்பாக வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படுவதாக இருந்தது. எனினும் இதுவரை அது தொடர்பில் எவ்வித ஒழுங்குகளும் மேற்கொள்ளப்படவில்லை இந்த நிலையில் நாளை இந்த வர்த்த மானி அறிவித்தல் வெளியிடப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (32)

# உயர்தர மாணவர்களுக்கான துரித மீட்டல் கருத்தரங்கு

2004ஆம் ஆண்டு க.பொ.த. உயர் தர தேர்வில் தோற்றும் வன்னிப் பகுதி மாணவர்களுக்கான தமிழ், இந்துநாகரிகம், புவியியல், வரலாறு பாடங்களுக்கான துரித மீட்டல் கருத் தரங்கு நாளை தொடக்கம் 30ஆம் திகதிவரை நடைபெற இருக்கின் றன.

கிளிநொச்சி:26,27,28, ஆம்திகதியில் தமிழ் ,27,28 ஆம் திகதியில் இந்துநாகரிகம், 29; 30ஆம் திகதியில் புவியியல்.

புதுக்குடியிருப்பு:27,28ஆம் திகதியில் தமிழ் இந்துநாகரிகம், 29,30ஆம் திகதியில் புவியியல், வரலாறு நடைபெறுமென அறிவிக்கப்பட்டிருக்கிறது.

# பயிற்சியின்போது சுகவீனமுற்று கப்டன்தர அதிகாரி மரணம்

கனேமுல்ல கமாண்டா இராணுவ முகாமில் கடமை யாற்றும் கப்டன்தர அதிகாரியொருவர் ஆரம்ப பரசூட் பயிற்சி நெறியில் ஈடுபட்டவேளையில் சுகவீனமுற்று பின்னர் ராகம வைத்தியசாலையில் மரணமான சம்பவம் ஒன்று நடைபெற்றுள்ளது.

கடந்த 20ஆம் திகதி மேற்படி முகாமில் பணியாற்றும் இராணுவத்தினருக்கான பரசூட் பயிற்சிநெறி ஆரம்பமானது. முதலாவது நிகழ்வாக 2 மைல் ஓடும் பயிற்சி நடை பெற்ற வேளை ஓடிக்கொண்டிருந்த இரு பயிற்சியாளர்கள் தம்மால் ஓட முடியாது என்று கூறியுள்ளனர். அதன் பின் பின்னால் வந்த இராணுவ வண்டியில் அவர்கள் இருவரும் கொண்டு செல்லப்பட்டு வைத்திய சிகிச்சை அளிக்கப்பட்டது. ஏனையயோர் பயிற்சியிலீடுபட்டனர்.

இருவரில் ஒருவரான குலவர்தன மேலதிக சிகிச்சைக்காக ராகம வைத்தியசாலைக்குக் எடுத்துச் செல்லப்பட்டு சிகிச்சையளிக் கப்பட்ட வேளை அடுத்தநாள் 21 ஆம் திகதி அவர் மரணமாகியுள்ளார்.

---

தே.அ.மு 16,பு.இ.மு-21, செலுத்தப் பட்டவாக்கு - 21544, அங்கீகரிக்கப்பட்டது - 21138,நிராகரிப்பு - 406.

## கறுப்புக்..

90ம் ஆண்டுகளில் இடம்பெற்ற பயங்கர சம்பவங்களை நினைவு கூருகின்றன. மீண்டும் இந்த நிகழ்வுகள் தலைதூக்கப் போவ தாகவே நாம் கருதுகின்றோம். தென்பகுதியிலும் மேற்கி லும் தற்போது நிலவும் அமைதியான நிலைமையைக் குழப்பும் ஒரு செயலாகவே நாம் இதனைக் கருது கின்றோம். நாம் மிகவும் சிரமமான பயணமொன்றையே மேற்கொண்டு வருகின்றோம். இந்தப் பயணத்தின் பாரதூரத்தை பாராளுமன்றத்துக்கு சென்ற முதல் நாளே உணர்ந்து கொண்டோம். விலங்குகளைவிட மிகவும் கீழ்த்தரமாக சிலர் பாரா ளுமன்றத்தில் நடந்து கொள் கின்றனர். என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## தபால்..

நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. புத்தளம் மாவட்டத்தில் வாக்குகளை எண்ணுவதற்காக 32நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.வெளிவந்த முடிவு வருமாறு:- புத்தளம் மாவட்டம் தபால் மூலவாக்களிப்பு முடிவுகள். ஐ.ம.சு.மு-2602, ஐ.தே.க-1675, ஐ.முன்னணி-01,தேசிய அபிவிருத்தி முன்னணி-04,புதிய இடதுசாரி முன்னணி-03, முற்போக்கு முன்னணி-01, பூமி புத்திர-05,பதிவானவாக்குகள்-4355,செல்லு படியானவை-4291, நிராகரிக்கப்பட்டவை-64

குருநாகல் மாவட்டத்துக்கான தபால் மூல வாக்களிப்பின் மொத்த முடிவுகள்,ஐ.ம.சு -13945,ஐ.தே.மு 6962,ஐ.ல.மு08,எ.சி.ம.க.சபை -,11

## மகாவலித்துறை..

நிலைப்பாடாகும்.மேலும் முன்னெடுக்கப்படவுள்ள சமாதான வழிமுறைகள் மற்றும் நோர்வேயின் அனுசரணை என்பன போன்ற விடயங்களில் ஜே.வி.பி சனாதிபதியுடன் விளக்கம் கோரலாம் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.(முன்னர் வந்த செய்தி 05ஆம் பக்கத்தில்)(32)

## பாராளு..

...ள்ளாத போது நாடாளுமன்றத் ... மீண்டும் சிக்கல் ஏற்பட ...ப்புண்டு. எனவே இதுவரை ...மும் நடைமுறையில் இல்லாத எதிர்க்கட்சியின் சார்பில் சபைமுதல்வர் ஒருவர் நாடாளுமன்றத்திற்கு தெரிவுசெய்யப்படுவதற்கான தீர்க்கமான முனைப்புக்களை எதிர்க்கட்சிகள் மேற்கொண்டுள்ளதாகவே தகவல்கள் வெளியாகியுள்ளன. இதேவேளை ஆளும்கட்சியின் சார்பில் சபைமுதல்வராக அமைச்சர் அனுரபண்டார நாயக்கவின் பெயர் பிரேரிக்கப்பட்டுள்ளது. எதிர்கட்சிகளைப் பொறுத்தவரையில் ஐக்கியதேசியமுன்னணியின் பங்காளி கட்சியொன்றின் தலைவரை நியமிப்பது குறித்து ஆராயப்பட்டுள்ளது.

இந்நிலையில் பிக்குகளுக்கு எதிராக நடவடிக்கையில் தொடர்ந்து ஈடுபட வேண்டாம் என சிறிலங்கா சுதந்திரக் கட்சி சிரேஷ்ட உறுப்பினர்கள் பலர் கூட்டுக்கட்சியான ஜே.வி.பி.க்கு கடுமையான எச்சரிக்கை விடுத்துள்ளனர். அது அரசாங்கத்தைக் கடுமையாக பாதிக்கும் எனவும் தெரிவித்துள்ளார்.

சிறிலங்காப் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, அனுராபண்டாரநாயக்க, சுசில் பிரேமஜயந்த, எ.எச்.எம்.பௌசி முன்னாள் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க உட்பட பலர் ஜே.வி.பி.யின் செயற்பாடு குறித்து விமர்சித்துள்ளனர்.

மேலும் அவர்கள் தெரிவிக்கையில் ஜே.வி.பி.யினர் ஏற்கனவே ஆரம்பித்துள்ள பிக்குகளுக்கு எதிரான பிரச்சாரம் அரசாங்கத்தின் உறுதிப்பாட்டை மிக மோசமாகப் பாதிக்கும் பிக்குகளின் ஆதரவின்றி அரசாங்கத்தின் நடவடிக்கைகள் பாராளுமன்றத்தில் தொடர்வது கடினமாகும். நாம் சிறுபான்மை அரசாங்கமாக இருப்பதால் ஏற்கனவே சிறியகட்சிகளின் ஆதரவு எமக்கு தேவையாயிருக்கிறது.

ஜாதிக ஹெல உறுமய விவகாரங்களைப் பொறுத்து பாராளுமன்றத்தில் அரசாங்கத்தை ஆதரிப்பதாக கூறியிருக்கிறது. சபாநாயகர் தெரிவு, ஹெலஉறுமய ஐக்கிய தேசிய கட்சி வேட்பாளர் லொக்கு பண்டாரவை ஆதரித்ததையடுத்து பிக்குகளுக்கு எதிரான பிரச்சாரத்தை ஜே.வி.பி ஆரம்பித்துள்ளது. இப்பொழுது சபாநாயகர் பதவிக்கான ஓட்டம் முடிவடைந்து விட்டது. நாம் பாராளுமன்றத்தில் நாளாந்த கடமைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. அதற்கு பிக்குகளின் ஆதரவு மிகத் தேவை எனத் தெரிவித்தனர்.

இதேவேளை பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஜாதிக ஹெல உறுமய பாராளுமன்ற உறுப்பினர்களான பௌத்த பிக்குகளை பிரதமரின் வதிவிடமான அலரிமாளிகைக்கு அழைத்துள்ளார். பிரதமர் தனது சகோதரரை அனுப்பி அவர்களை அழைத்ததாகவும் அதனையடுத்து அவர்களும் அலரிமாளிகைக்கு சென்றதாகவும் அறிவிக்கப்படு கிறது. நல்லெண்ண அடிப்படை யில் தாம் இந்த அழைப்பை ஏற்று அலரி மாளிகைக்கு சென்றதாகவும் அங்கு சமய அடிப்படையிலான நிகழ்வுகளில் மட்டும் கலந்துகொண்டதாகவும் அரசில் பேசப்படவில்லை எனவும் ஹெல உறுமய பேச்சாளர் தெரிவித்தார். (32)

# பால திருத்த வேலைகளுக்காக பரந்தன் முல்லைவீதி 26.04.2004 அன்று போக்குவரத்துக்கு தடைசெய்தல்

*மேற்படி வீதியில் பால திருத்த வேலைகளை 26.04.2004 (திங்களன்று அவசரமாக மேற்கொள்ள, வீதி அபிவிருத்தி அதிகாரசபை தீர்மானித்துள்ளதால் 26.04.2004 திங்கள் பரந்தன் சந்தியில் இருந்து புளியம்பொக்கணைச் சந்திவரையிலான பிரதான வீதியை தற்காலிகமாக போக்குவரத்தினை தடைசெய்யுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன். மேலும் மாற்றுப் பாதையாக வட்டக்கச்சி (கோவிந்தன் கடைச் சந்தியில் இருந்து புளியம்பொக்கணைச் சந்திவரை பயன் படுத்தலாம் என இத்தால் வேண்டப்படுகின்றது. இடைஞ்சல்களுக்கு வீதி அபிவிருத்தி அதிகார சபை தனது மன வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.*

(சி.9383)

வே.மோகன்,
பிரதான பொறியியலாளர்,
வீதி அபிவிருத்தி அதிகாரசபை,
முல்லைத்தீவு.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆண்டு ஏப்பிரல் மாதம் 25 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.